இனி இது ரகசியம் அல்ல!

ராஜித சேனாரத்னவின் வழக்கைப் பொறுத்தவரை அவரது சட்டத்தரணிகளுக்கு 'எது நடந்ததோ, அது நல்லாகவே நடந்தது; எது நடக்கின்றதோ, அது நல்லாகவே நடக்கின்றது; எது நடக்கவிருக்கின்றதோ அதுவும் நல்லாகவே நடக்கும்' என்ற பக்கம் 02

பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 12 சனிக்கிழமை 28.12.2019 கதிர் 53



# கைதானார் ராஜித சேனாரத்ன!

## ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவாறு 30 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில்

கொழும்பு, டிசெ. 2

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறும் நிலையில், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதன் காரணமாக தாம் அனுமதிக்கப்பட்டுள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற பக்கம் 03

# தமிழ்க் கட்சிகளுக்கு இடையே ஆசன ஒதுக்கீட்டுக்கு இழுபறி!

## நேற்றுத் தொடங்கியது

யாழ்ப்பாணம், டிசெம்பர் 28

விரைவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை ஒட்டி தமிழ்த் தேசியக் கட்சிகளின் தரப்புகளுக்கு இடையே வேட்பாளர் ஒதுக்கீட்டுச் சமர் நேற்றுத் தொடங்கியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஒரு புறமாகவும், தமிழ் மக்கள் கூட்டணி தலைமையிலான கட்சிகள் இடையே மறுபுறமாகவும் இந்த இழுபறி ஆரம்பித்திருப்பது மிக நம்பகமாக அறியவந்தது. பக்கம் 03

## வடக்கு – கிழக்குக்கு வெளியிலும் கூட்டமைப்பு தேர்தலில் போட்டி

### சில தினங்களில் உத்தியோகபூர்வ அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 28

எதிர்வரும் தேர்தலில் வடக்கு – கிழக்குமாகாணங்களுக்குவெளியிலும் போட்டியிடுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிசீலித்துள்ளதாகவும், எந்தெந்த மாவட்டங்களில் போட்டியிடுவது என்பது தொடர்பில் இன்னும் சில தினங்களில் உத்தியோபூர்வமாக இறுதி பக்கம் 03

## மணல் கொள்ளைக்கு எதிராக சாவகச்சேரியில் போராட்டம்!





யாழ்ப்பாணம், டிசெ. 28

வடக்கில், சட்டத்துக்குப் புறம்பான முறையில் இடம்பெறும் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு கோரி பக்கம் 03

## 1 லட்சத்து 81,126 மாணவர்கள் பல்கலை அனுமதிக்குத் தகுதி

கொழும்பு, டிசெ. 28

2019 ஓகஸ்டில் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 126 பேர் பல்கலைக் பக்கம் 03



## ஆசனப் பங்கீட்டில் இணக்க நிலையாம்

### சொல்கிறார் மாவை எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுக்கு இடையிலான ஆசனப் பங்கீடு தொடர்பில் இணக் பக்கம் 03

## தேசிய கீதம் பாட வேண்டாம் என்று தமிழர்களைக் கேட்கின்றதா அரசு?

### இப்படிக் கேள்வி எழுப்புகின்றார் சுமந்திரன்

தமிழில் தேசிய கீதம் பாட வேண்டாம் எனக் கூறுவது ஒரு நாட்டுக்குள்ளே இருக்கின்ற தேசிய இனங்களுக்கு இடையே ஒப்புறவு, நல்லிணக்கம் என்பவற்றை முற்றுமுழுதாக முறியடிக்கும் செயற்பாட்டை அரசாங்கம் செய்து வருகின்றது பக்கம் 02



## இன நல்லுறவை முறிக்கும் செயற்பாட்டில் கோட்டாபய!

### சீ.வீ.கே. சிவஞானம் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், டிசெ. 28

சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் பாட வேண்டும் என்ற அரசின் தீர்மானம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கோட்டாபய பக்கம் 03

## யாழ். இந்து மாணவன் உயிரியலில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம்



யாழ்ப்பாணம், டிசெ. 2

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிமாணவன்ஜெயானந்தராசா கிருஷிகன், உயிரியல் பிரிவில் 3 திறமைச் சித்திகளை (3ஏ) பெற்றுத் பக்கம் 03

## கலைப்பிரிவில் நெடுந்தீவு மாணவன் யாழ். மாவட்டத்தில் மூன்றாம் இடம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவன்யேசுதாசன்கிறிஸ்துராஜன்கலைப்பிரிவில் 3 பாடங்களிலும் திறமைச் சித்தி (3ஏ) பெற்றுள்ளார். பக்கம் 03



## முல்லையில் யாழினி முதலிடம்



முல்லைத்தீவு,டிசெ. 28

இறுதிப் போரில் தந்தையைத் தொலைத்து விட்டு சிறு வயதிலிருந்து ஒரு பக்கம் 02

## சபைத் தலைவராக தினேஷ் கொறடா பதவிக்கு டலஸாம்

அரசாங்கத்தரப்புக் கூட்டணி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக் பக்கம் 02

# யாழ். மணல் கொள்ளையர்களை உடன் நீதிமன்றில் நிறுத்துங்கள்!

## ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவு



யாழ்ப்பாணம், டிசெ. 28

மணல்கொள்ளையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துங்கள். முடியாவிட்டால் அவர்களுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிப்பதற்கு நீதிமன்றம் தயாராக உள்ளது என ஊர்காவற்றுறை நீதிவான் கூறியுள்ளார் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

மண்கும்பான் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் பொது மக்கள் சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பொதுமக்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று ஆஜரானார். பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துக்கூறும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

மண்கும்பான் பகுதியில் மணல் கொள்ளை இடம்பெற்றுவந்த நிலையில் பொதுமக்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் இணைந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். எனினும் ஒரு சிலர் மட்டுமே கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில், 10 பேர் வரையில் கைது செய்யப்படாமல் உள்ளனர். அவர்களைக் கைது செய்ய முடியவில்லை எனப் பொலிஸார் மன்றில் கூறியிருக்கின்றனர். ஆனால் அந்த நபர்கள் ஊருக்குள் வந்து செல்கின்றனர் எனவும், பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் மக்கள் கூறுகின்றனர். அதனை முறைப்பாட்டாளர் பிரசன்னத்தில் நீதிமன்றில் வாய்மூல முறைப்பாடாகக் கூறியுள்ளோம். இதனைக் கருத்தில் எடுத்துள்ள நீதிபதி குற்றஞ்சாட்டப்பட்டவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருக்கின்றமையுடன், கைது செய்ய முடியாவிட்டால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிப்பதற்கு நீதிமன்றம் தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கின்றார்.

எனவே இத்தோடு மணல் அகழ்வு நிறுத்தப்படும் என நாங்கள் நம்புகிறோம். மறுபக்கம் கனியவளத்திணைக்களம் மணல் அகழ்வதற்கான சகல அனுமதிகளையும் இரத்துச் செய்துள்ளது. எனவே மணலை அகழவும் முடியாது. கொண்டு செல்லவும் முடியாது. மணல் மிக முக்கியமான இயற்கை வளம். அதனைப் பாதுகாக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. – என்றார். (ஐ-07)

### முல்லையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையை இழந்த தாயின் அரவணைப்பில் வாழ்ந்து, வணிகத் துறையில் முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுச் சாதித்துள்ளார் மாணவி இரவிச்சந்திரன் யாழினி.

நேற்று வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் அ பகுதியைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி இரவிச்சந்திரன் யாழினி வணிகத்துறையில் மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இறுதிக்கட்ட போரின்போது தனது தந்தையைத் தொலைத்த இந்த மாணவி ஒரு கையை இழந்த தன் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் அவர் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் வணிகத்துறையில் மாவட்ட ரீதியில் முதலாமிடம் பெற்றுச் சாதித்துள்ளார். (ஐ)

### சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தின் போது அரச நாடாளுமன்ற சபைத் தலைவர் மற்றும் அரசாங்க தரப்பில் பிரதம கொறடா ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

சபைத்தலைவர் பதவி அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு வழங்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்க தரப்பின் பிரதம கொறடாவாக அமைச்சர் சடலஸ் அழகப்பெரும அல்லது மஹிந்த அமரவீர ஆகிய இருவரில் ஒருவர் நியமிக்கப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

### தேசிய கீதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதையே வெளிக்காட்டுகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமனற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நெது ஊடகங்களுக்குக் கருத்துக்களை வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

2015 ஆம் ஆண்டு நல்லிணக்க அரசாங்கம் ஒன்று கொண்டுவரப்படடதன் பின்னர் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் – பல தசாப்தங்களின் பிறகு – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நானும் எமது கட்சியின் தலைவர் சம்பந்தனும் கலந்துகொண்டிருந்தோம். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. நல்லிணக்க சமிக்ஞைகள் பல இருந்தன. தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டது. அதுமட்டுமல்லாது அப்போது ஜானதிபதி மைத்திரிபால தனது உரையில் போர் வெற்றியை கொடூரமான நிகழ்வு எனக் கூறியிருந்தார்.

இவ்வாறு பல நல்லிணக்க சமிக்ஞைகள் தென்பட்டன. அவ்வாறு இருந்த சூழ்நிலை மாறுபட்டு இன்று நல்லிணக்கத்திற்கு மாறான செயற்பாடுகள் இடம்பெற ஆரம்பித்திருக்கின்றன. தமிழில் தேசிய கீதம் பாடப்பட மாட்டாது எனக் கூறுவது அதில் சிறிய அங்கம் மட்டுமே. அரசாங்கத்தின் போக்கு முற்று முழுதாக மாறியிருக்கின்றது. இது நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடு அல்ல. எனவே, நாங்கள் எமது பக்கத்தில் இருந்து சமாதான கைகளை நீட்டுவதற்கான சமிக்ஞைகளை அரசாங்கம் இப்போது கொடுக்கவில்லை. அதற்கு மாறான சமிக்ஞைகளையே கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

தமிழில் தேசியகீதம் பாடவேண்டாம் என அவர்கள் உத்தரவு கொடுத்தால் அதனுடைய கருத்து தமிழ் மக்கள் தேசிய கீதம் பாட வேண்டாம் என்றே சொல்லுகின்றார்கள். தமிழ் மக்களை தேசிய கீதம் பாட வேண்டாம் என்று சொன்னால் நாங்கள் சந்தோசமாக பாடாமல் விட்டுவிடுவோம். ஏனென்றால் தேசிய வாழ்க்கையில் இருந்து தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு பல தசாப்த காலங்கள் ஆகியிருக்கின்றன. முதலாவது குடியரசு அரசமைப்பு உருவாக்கத்தில் இருந்தே நாம் அதனைச் சொல்லி வந்திருக்கின்றோம்.

எங்களின் நியாயமான ஜனநாயகக் கோரிக்கைகள் ஏற்கப்படாமல் இருந்த காரணத்தினால் நாங்கள் தேசிய வாழ்க்கையில் இருந்து விடுபட்டவர்களாக எங்களை கணித்திருக்கின்றோம். இதில் இருந்து மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாக இருந்தால் மிக முக்கியமாக அரசியல் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அப்போது தான் நாங்கள் சமமான பிரஜைகளாக இந்த நாட்டில் வாழ முடியும். தேசிய வாழ்க்கையில் இருந்து விலக்கி வைக்கின்ற நிகழ்வின் இன்னொரு அடையாளமே தமிழில் தேசிய கீதம் பாட வேண்டாம் எனக் கூறுவது.

ஆகவே பாடுவதல்ல முக்கியமான விடயம். தமிழ் மக்கள் தேசிய கீதம் பாடுவதையும் தடுக்கின்ற போக்கிலே அரசாங்கம் போய்க் கொண்டிருக்கின்றது. நாங்கள் பாட வேண்டும் என்று வரிந்து போய்க் கேட்கவில்லை. எங்களைப் பாட வேண்டாம் என்றால் நாம் சந்தோசமாகப் பாடாமல் இருக்கின்றோம். ஆனால் ஒரு நாட்டுக்குள்ளே இருக்கின்ற தேசிய இனங்களுக்கு இடையே ஒப்புறவு, நல்லிணக்கம் என்பவற்றை முற்றுமுழுதாக முறியடிக்கும் செயற்பாட்டை அரசாங்கம் செய்து வருகின்றது என்பதனை நாம் அரசுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றோம். – என்றார்

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீதோபதேச நிலைமைதான்.

ராஜிதவுக்கு எதிரான பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் அவர் தொடர்பான சட்ட விடயங்களை எவ்வாறு கையாள வேண்டும், எவ்வாறு ஒப்பேற்ற வேண்டும் என்று அவரது சட்டத்தரணிகள் விரும்பினரோ அப்படித்தான் விடயங்கள் நடக்கின்றன.

அவரைக் கைது செய்து சிறையில் அடைக்க விரும்பியோருக்கு அதனை இப்போதைக்குச் செய்ய முடியவில்லை. தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அவருக்கு அங்கு நீதிமன்றக் காவலை விரிவுபடுத்த முடிந்திருக்கின்றது. அவ்வளவு தான்.

நேற்று முதல் திங்கள் (நாளை மறுதினம்) வரைத்தான் அவருக்கு விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அவர் கைது செய்யப்பட்டமை தொடர்பான விடயம் அன்று நீதிமன்றில் எடுக்கப்படும் போது, அவரது சட்டத்தரணிகளால் பிணை மனுக் கோரிக்கை முன் வைக்கப்படும். அதேசமயம் தம்மைக் கைது செய்வதற்கு எதிராக அவர் தாக்கல் செய்த முன்பிணைக் கோரிக்கை மீதான விசாரணையும் நாளை மனுதினம் நடக்கவிருக்கின்றது. ஆஸ்பத்திரியில் இருக்கும் ராஜிதவுக்கு அன்றைய தினம் எப்படியும் பிணை பெற்றுவிடலாம் என்பது அவரது சட்டத்தரணிகளின் முழு நம்பிக்கை.

ராஜிதவுடன் சேர்ந்து செய்தியாளர் மாநாட்டில் வெள்ளைவான் கடத்தல் குறித்துப் பிரஸ்தாபித்த இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருப்பது தெரிந்ததே. அவர்கள் தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது ராஜிதவின் சட்டத்தரணிகளும் அங்கு பிரசன்னமாகினர். அந்த வழக்கை ஒட்டியே ராஜிதவுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி மற்றைய இரு நபர்களுக்கும் எதிரான நீதிமன்ற 'பி' அறிக்கையில கொள்ளை, கொலை எனப் பதினான்கு குற்றச்சாட்டு விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அந்த 'பி' அறிக்கையின் கீழ் ராஜிதவுக்கு கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையை அவரது சட்டத்தரணிகள் ஆட்சேபித்தனர். அதனை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு ராஜித தொடர்பில் புது 'பி' அறிக்கை சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டது.

மேற்படி இருவரும் புரிந்த குற்றங்களுக்கு உதவி, ஒத்தாசை வழங்கி உடந்தையாக இருந்தமை, ஜனாதிபதித் தேர்தலைப் பாதிக்கும் விதத்தில் தவறான தகவல்களை வெளிப்படுத்தியமை, தவறான வாக்குமூலத்தை அளித்தமை, ஒரு குற்றம் பற்றிய தகவல் அறிந்திருந்தும் அதை மறைத்தமை, சதி செய்தமை போன்ற நன்கு வகையான குற்றச்சாட்டுக்கள் அடங்கி. புதிய 'பி' அறிக்கை ராஜித தொடர்பில் குற்றப் புலனாய்வுத் தரப்பினரால் முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 38 வேட்பளர்களில் எவருமோ அல்லது தேர்தல் ஆணைக்குழுவோ அவ்வாறு தேர்தலைப் பாதிக்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டதாக பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்காத நிலையில், பொலிஸார் தம்பாட்டில் இப்படி ஒரு குற்றச்சாட்டை ஒரு தரப்பு மீது சுமத்தி அதனடிப்படையில் பிடியாணை கோரிப் பெற்று, கைது செய்ய முயல்வது முழுத் தவறு என ராஜிதவின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் சுட்டிக்காட்டினர். இந்த வழக்கில் இந்த விவகாரம் முக்கிய முடிவை எடுப்பதற்கான அடிப்படையான இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

நேற்று இந்த வழக்கு எடுக்கப்பட்டபோதே ராஜிதவின் சட்டத்தரணிகள் ராஜிதவுக்கு பிணை வழங்கக் கோரினர். ராஜித கைது செய்யப்பட்டுவிட்டாரா பிணை வழங்குவதற்கு? – என்று நீதிவான் திருப்பிக் கேட்டார்.

ஆஸ்பத்திரியில் பொலிஸ் குவிக்கப்பட்டுள்ளது. அவர் கைது செய்யப்பட்ட மாதிரித்தான் – என்றார் ராஜிதவின் சார்பில் அஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா.

பொலிஸார் அதனை மறுத்தனர். அவர் அப்போது வரைக் கைது செய்யப்படவில்லை என்றனர் அவர்கள்.

சுகவீனம் ஒன்றும் இல்லை, தமக்கு சுகவீனம் என்று பாசாங்கு பண்ணிக்கொண்டு ராஜித ஆஸ்பத்திரியில் போய் படுத்துக்கொண்டிருக்கின்றார். அவருக்கு சுகவீனம்தானா என்பதை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் சோதனை செய்ய உத்தரவிடுங்கள் – என்று கோரினர் பொலிஸார்.

பெண்மணியான பிரதம நீதிவான் சிரித்தார். கொஞ்சம் முதல் தான் ராஜித இன்னும் கைதுசெய்யப்படவில்லை என்று கூறினீர்கள். கைது செய்யப்படாதவரை சட்ட மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி நான் எப்படி உத்தரவிடமுடியும்? – என்று கேட்டார் நீதிவான்.

ராஜித கைதுசெய்யப்பட்டால் அதன் பின்னர் பார்க்கலாம் என்ற தொனியில் இருந்தது அவரது பதில்.

இன்று சனி, நாளை ஞாயிறு வார இறுதி விடுமுறை. நீதிமன்றம் இயங்காது. ஆகையினால ராஜிதவை சட்ட வைத்திய அதிகாரிக்கு முன் நிறுத்தி பரிசோதிக்கும் உத்தரவு ஏதும் புதிதாகப் பிறப்பிக்கப்பட வாய்ப்பில்லை.

நேற்று பிற்பகலில் தாம் அனுமதிக்கப்படடிருக்கும் ஆஸ்பத்திரியிலேயே பொலிஸாரல் கைது செய்யப்பட்டு அங்கேயே காலில் வைக்கப்பட்ட ராஜிதவின் இடத்துக்கு பதில் நீதிவான் சென்று விளக்கமறியல் உத்தரவு கொடுத்துவிட்டார்.

ஆகவே நாளை மறுதினம் ராஜிதவின் வழக்கு நீதமன்றல் எடுக்கப்படும் வரை இந்த நிலைமையே தொடரும் என எதிர்பார்க்கலாம்.

ராஜித ஆஸ்பத்திரியில் படுத்திருப்பார் அவருக்கு சிறைக்காவலர்கள் பாதுகாப்பு கொடுத்திருப்பர்.

திங்கட்கிழமை ராஜிதவுக்கு பிணை கிடைக்குமா, அவர் வெளியில் வருவாரா என்பதைப் பார்க்கலாம்.

ராஜித குறித்து சில விடயங்களை எழுதுவேன் என்று இப்பத்தியில் நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன். – அதுவும் வெள்ளைவான் விடயங்கள் குறித்து.

வெள்ளைவான் அட்டகாச விவகாரத்தில் ராஜிதவும் கூடப் பதில் தர வேண்டிய பொறுப்பிலும் கடப்பாட்டிலும் இருக்கின்றார்.

அடுத்து வரும் நாள்களில் இப்பத்தியில் அந்த விவரங்களை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

- மின்னல் -

## கைதானார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படி நீதிமன்றக் காவலில் அவர் இருப்பார்.

வெள்ளை வான் விவகாரம் தொடர்பான ஊடக சந்திப் பொன்றை நடத்தி, பொய்யான தகவல்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அவரைக் கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் பண்டார நெலும்தெனியவினால் கடந்த 24ஆம் திகதி பிடியாணை பிறப் பிக்கப்பட்டு இருந்தது.

இந்தப்பிடியாணையைமீளப் பெற்றுக்கொள்ளுமாறு, ராஜித சேனாரத்னவின் சட்டத்தரணி களால் நேற்றைய தினமும் நீதி மன்றத்தில் வற்புறுத்தப்பட்ட போதும் கொழும்பு பிரதான நீதி வான்லங்கா ஜயரத்ன அதற்கான அனுமையை வழங்கவில்லை.

முன்னதாகராஜித சேனாரத்ன நேற்று முன்தினம் இரவு நார ஹேன்பிட்டியவில் உள்ள லங்கா தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். நேற்று முன் தினம் இரவு அவரிடம் வாக்கு மூலம் ஒன்றைப் பதிவு செய்துக் கொள்ளலங்காவைத்தியசாலைக் குச் சென்ற குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால், அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து கொள்ள முடியவில்லை.

இந்நிலையிலே, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுப் பிற்பகல் அவர் ஆஸ்பத் திரியில் சிகிச்சைபெறும் நிலை யில் குற்றப் புலனாய்வுப் பிரிவி னால் கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து, நேற்றுப் பிற் பகல்முன்னாள் அமைச்சர்ராஜித சேனாரத்ன சிகிச்சை பெற்று வரும் லங்கா வைத்தியசாலைக் குச் சென்ற கொழும்பு மேலதிக நீதிவான், அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவு பிறப் பித்தார். (ஐ)

## 1 லட்சத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், 71 பரீட்சார்த்தி களின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன எனவும் தி ணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தால் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2019 ஓகஸ்டில் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 2 லட்சத்து 81 ஆயிரத்து 786 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 167 பேர் புதிய பாடத் திட்டத்திலும் 94 ஆயிரத்து 619 பேர் பழைய பாடத்திட்டத்திலும் பரீட்சைக்குத் தோற்றினர்.

பெறுபேறுகளின் அடிப்படை யில் மூன்று பாடங்களிலும் சித்தி யடைந்து ஒரு லட்சத்து 81 ஆயி ரத்து 126 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற் றுள்ளனர். 64 சதவீதமானோர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர். அவர்களில் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 637 பேர் புதிய பாடத்திட்டத்தின் அடிப் படையிலும் 67 ஆயிரத்து 489 பேர் பழைய பாடத்திட்டத்திலும் தோற்றியிருந்தனர்.

அத்துடன், பல்வேறு முறைப் பாடுகளின் அடிப்படையில் புதிய பாடத்திட்டத்தில் தோற்றிய 42 மாணவர்களினதும் பழைய பாடத்திட்டத்தில் தோற்றிய 29 மாணவர்களினதும் பெறுபேறுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன - என் றுள்ளது. (ஐ)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமாலைதமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி களின் கூட்டம் யாழ்ப்பாணம் மார் டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத் தில் நடைபெற்றபோது அங்கும் தேர்தலில் வேட்பாளர் ஆசனம் தொடர்பாகப் பூர்வாங்கப் பேச்சுக் கள்நடந்தனஎனத்தெரியவருகின் றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக் கிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட் டத்தில் ஏழு எம்.பிக்களைத் தெரிவு செய்வதற்காக பத்து வேட்பாளர் களைக் கொண்ட பட்டியல் சமர்ப் பிக்கப்படவேண்டும்.

இம்முறை யாழ்.மாவட்டத்தில் தங்களுக்கு தலா இரண்டு இடங் கள் தரப்படவேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் ரெலோவும், புளொட்டும் வலியுறுத்தின என அறியவந்தது.

இம்முறை கூட்டமைப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இல்லாமை யால், கடந்த தடவை தந்த ஓர் இடத்துக்கு மேலதிகமாக இரண்டு இடங்கள் தங்களுக்கு வழங் கப்படவேண்டும் என்பது புளொ ட்டின் நிலைப்பாடாக இருக்கின்றது.

ஆனால் புளொட், ரெலோ, இரண்டு கட்சிகளுக்கும் சேர்த்து யாழ்.மாட்டத்தில் நான்கு இடங் களைத்தரமுடியாது, ஆகமூன்று இடங்களையே ஒதுக்க முடியும். அதை நீங்கள் உங்களுக்குள் பங்குபோட்டுக்கொள்ளுங்கள் என்பது இலங்கைத் தமிழரசுக் கட்சித் தரப்பின் பதிலாக இருந்த தாக அறியமுடிந்தது.

தற்போதையதமிழரசுசார்பில் யாழ்.மாவட்டத்தில் நான்கு எம். பிக்கள் உள்ளனர். அவர்களுடன் சேர்ந்து மேலும் மூன்று இடங்கள் தங்களுக்குத் தேவைப்படுகின் றனஎனத்தமிழரசுவலியுறுத்துகின் றது.

### வன்னிமாவட்டம்

வன்னிமாவட்டத்தில் வேட் பாளர் பட்டியல் எண்ணிக்கை ஒன்பதாகும்.

அதில்புளொட்டுக்கு இரண்டும், ரெலோவுக்கு மூன்றும் வழங்க முன்வந்துள்ள இலங்கைத் தமி ழரசுக் கட்சி, ரெலோவின் மூன்று இடங்களில் ஒன்றை அக்கட்சி ம லையகத் தரப்புப் பிரதிநிதி ஒரு வருக்குக் கட்டாயம் வழங்கவேண் டும் என வற்புறுத்தியதாம்.

அதற்கு இணங்க மறுத்த ரெலோ, தமிழரசு தன்வசம் வைத் திருக்கும் நான்கு இடங்களில் ஒன்றை மலையகப் பிரதிநிதிக்கு வழங்கலாமே என்று தெரிவித்தது.

ஆனால் அதற்கு தமிழரசு மறுத்துவிட்டது என்று தெரிகின் றது.

ஏற்கனவே, அப்பகுதியில் எம்.பிக்களாக இருக்கும் டாக்டர் சிவமோகன், சார்ள்ஸ் நிர்மல நாதன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகி யோருடன் டாக்டர் சத்தியலிங்கத் துக்கும் அங்கு வேட்பாளர் நிய மனம் வழங்கும் கட்டாயத்தில் இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னுடைய நான்கு இடங் களில் ஒன்றை மலையகத் தரப் புக்கு விட்டுக்கொடுக்க வாய்ப்பில் லை என்பது தெரிந்துவிட்டது.

அதேபோல, கிழக்கு மாகாண தேர்தல் மாவட்டங்கள் குறித்தும் மேலோட்டமாக நேற்றுப் பேசப் பட்டது என்றும் -

அடுத்த வாரம் கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடை பெறும் கூட்டத்தில் இவ்விடயங் கள் தொடர்பில் இறுதி முடிவு எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட் டது. என்றும் - அறியவந்தது.

இதேசமயம் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியின் தலைமையில் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்ற தேர்தல் கூட்டமைப்பிலும் வேட்பாளர் நியமனம் தொடர்பில் இழுபறி தொடங்கிவிட்டதாக அறியவந்தது.

அந்தத் தரப்பின் கூட்டுக் கட்சிகள் யாவை, கூட்டமைப்பு ஏற்பாடுகள் என்ன, செயற்றிட்டம் என்ன போன்றவை குறித்தெல் லாம் இறுதிசெய்யப்பட முன்னரே ஆசன ஒதுக்கீடு தொடர்பான சர்ச்சை அதை முந்திக்கொண்டு தலைநீட்டியிருப்பதாக அறியவந் தது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பத்துவேட்பாளஇடங்களில் தமது தமிழ் மக்கள் கூட்டணிக்கு - 4 இடங்கள், சுரேஷ்பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல். எவ்வுக்கு இரண்டு இடங்கள் மற் றும் சிவாஜி - ஸ்ரீகாந்தா இணை யின் தமிழ்த் தேசியக் கட்சி, ஐங் கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், அனந்தி சசிதரனின் ஈழத் தேசிய சுயாட்சி இயக்கம், அனந்தி சசிதரனின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் மற்றும் சிவில் சமூகம் ஆகிய நான்கு தரப்புகளுக்கும் தலா ஓர் ஆசனமும் வழங்குவது என்ற முடிவுக்கு விக்னேஸ்வரன் வந்து விட்டார் என்றும் -

அதனைத் தம்மோடு சேர்ந்து கூட்டமைப்பு ஏற்படுத்தும் முயற்சி யில் இருக்கும் பங்காளிக் கட்சி களின் தரப்புகளுக்கு அவர் அறி வித்துவிட்டார் என்றும் - மிக நம் பகமாக அறியவந்தது.

உத்தேசக் கூட்டை வலுவாக அழைத்து செயற்படுத்துவதை இன்னும் எட்டாமல், அதற்கு முன்னர் வேட்பாளர் ஒதுக்கீடு குறித்து விக்னேஸ்வரன் தமது யோசனைத்திட்டத்தை முன்வைத் தமை அவருடன் கூட்டுச் சேரும் திட்டத்தில் இருக்கும் தரப்புகளுக்கு ஆச்சரியத்தையும், விசனத்தை யும், அதிர்ச்சியையும் ஏற்படுத் தியிருந்தமையை நேற்று அறிய முடிந்தது. (உ)

## கலைப்பிரிவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் மாவட்ட நிலையிலும் 3ஆம் இடத்தையும் தேசிய மட் டத்தில் 288ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம் பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று இரவு 8 மணியளவில் வெளியிடப்பட்டன.

உயர்தரப் பரீட்சை பெறு பேறுகளை, சுட்டெண் மாத்திர மின்றி தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை பதிவு செய்வதன் மூலமும் பார்வையிட முடியும்.

இலங்கையில் மிகவும் பின் தங்கிய தனிப் பிரதேசமான நெடுந்தீவுக்கும் தீவக மண்ணுக் கும் கல்வி கற்ற பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார். (ஐ-07)

## இன நல்லுறவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு பழிவாங்கும் செயற்பாடு களிலேயே ஈடுபட்டு வருவதாக வும் அவர் குற்றம்சாட்டினார்.

கல்வியங்காட்டில் அமைந் துள்ள அவரது இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவிய லாளர்களுக்குக் கருத்து தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் -

இன நல்லிணக்கத்தை ஏற் படுத்தும் முகமாக தேசிய கீதமா னது சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் கடந்த ஆட்சியின் போது பாடப்பட்டு வந்தது. எனி னும் தற்போது ஆட்சியில் உள்ள இந்த அரசானது ஏன் இவ்வாறு இன நல்லுறவை முறிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகிறது?

அத்தோடு இந்த அரசானது பழிவாங்கும் செயற்பாடுகளில் தான் ஈடுபட்டு வருகின்றது. அதி லும் அண்மையில் கைதுசெய் யப்பட்ட சம்பிக்க ரணவக்க இந்த வழக்கு விசாரணையில் இருந்து விடுவித்த பின்னர் மீண்டும் அவ ரது வழக்கு தூசு தட்டப்பட்டு மீண் டும் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே புதிய அரசானது இவ்வாறான செயற் பாடுகளை நிறுத்த வேண்டும் - என்றார். (ஐ-07)

## யாழ். இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய ரீதியில் 2ஆம் இடத்தைப் பிடித்துச்சாதனைபடைத்துள்ளார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று மாலை வெளியாகின.

யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி மாணவன் ஜெயானந்தராசா கிருஷிகன், உயிரியல் பிரிவில் 3 பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்று அகில இலங்கை மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் யாழ். மாவட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளார். அவரது இசட் புள்ளியாக 3.1957 ஆகும். (ஐ-7)

## ஆசனப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை அடைந்திருப்பதாகத் தெரி வித்துள்ள கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா, இது தொடர்பில் கட்சித் தலைவர் சம்பந்தன் தலை மையில் கூடிய ஆராய்ந்து எதிர் வரும் 3 ஆம் திகதி இறுதி முடிவை அறிவிக்க உள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டம், யாழ் மார்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழர சுக் கட்சியின் தலைமை அலு வலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது. சுமார் இரண்டு மணி நேரமாக நடை பெற்ற இந்தக் கூட்டத்தின் முடிவில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பான ஊடகங்களுக்கு மாவை சேனாதிராசா எம்.பி. கருத்து தெரிவிக்கையில் -

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் அண்மை யில் ஒரு கூட்டமொன்று நடை பெற்றிருந்தது. அந்தக் கூட்டத் தின் தொடர்ச்சியாக இன்றைய (நேற்று) இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய நேற்றுக் கூடிய பங்காளிக் கட்சி கள் பல்வேறு விடயங்கள் தொடர் பில் ஆராய்ந்து தத்தமது கோரிக் கைகள் அல்லது நிலைப்பாடு களைத் தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக கூட்டமைப்பிலுள்ள இந்த மூன்று கட்சிகளுக்குமான ஆசனப் பங்கீடு மற்றும் வேட் பாளர்களை நியமித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்ந் திருக்கின்றோம்.

அந்த அடிப்படையில் யாழ்ப் பாணம் வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற இடங்களில் ஆசனங்களை - அதாவது வேட்பாளர்களை ஒதுக் குவது - தொடர்பாக நாங்கள் பெரும்பாலும் ஓர் இணக்கத்தை அடைந்திருக்கின்றோம்.

மீண்டும் 3 ஆம் திகதி நாடாளு மன்றக் கூட்டத்தின் பின்னர் கொழும்பிலே நாங்கள் கூடி இறுதி தீர்மானத்தை எடுக்க வாய்ப்பிருக்கின்றது. எல்லோரும் சிறந்த முறையில் தங்களது கருத்துக்களை முன்வைத்திருக் கிறார்கள். அதனால் சிறந்த முறையில் தீர்மானம் எடுப்பதற்கு அடித்தளமிடப்பட்டிருக்கின்றது - என்றார். (ஐ-07)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை அறிவிக்க உள்ளதாக வும் தமிழரசுக் கட்சியின் தலை வர் மாவை சேனாதிராசா தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் -

வடக்கு - கிழக்கில் போட்டியிடு வதற்கான ஆசனப் பங்கீடுகள் தொடர்பில் பேசியிருக்கின்றோம். அதே நேரத்தில் வடக்கு - கிழக் குக்கு வெளியிலும் எதிர்காலத் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பாகவே பெரும்பாலும் பேசியிருக்கின்றோம். வடக்கு - கிழக்குக்கு வெளியே போட்டியிடு வதது பற்றி அநேகமாக அடுத்த வாரம் நாடாளுமன்றம் கூடிய பின்னர் இறுதி முடிவை அறிவிப் போம்.

குறிப்பாக வடக்கு - கிழக்கில் நாங்கள் போட்டியிடுவது மற்றும் அதற்கான ஆசனங்கள், வேட்பா ளர் தொடர்பில் எடுத்த தீர்மா னங்களை சம்பந்தனுடன் பேசி இறுதி செய்வதற்கும், வடக்கு - கிழக்குக்கு வெளியில் நாங்கள் போட்டியிடுவது பற்றிகொழும்பில் நடக்கும் கூட்டத்திலும் இறுதி முடிவை எடுப்பதற்கும் தீர்மானித் திருக்கின்றோம்.

வடக்கு - கிழக்குக்கு வெளி யில் போட்டியிடுவது என்றால் எந்தெந்த மாவட்டங்கள் என்பது பற்றியும் அடுத்த கூட்டத்தில்தான் தீர்மானிப்போம். அதிலும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் போட்டியிடுவது தொடர்பில் நாங் கள் பேசினோம். அதனைவிட தமிழரசுக் கட்சியின் ஆரம்ப காலங்களில் நாங்கள் புத்தளம், சிலாபம் போன்ற இடங்களில் கூட போட்டியிட்டிருக்கின்றோம்.

ஆனபடியால் அவற்றைப் பற்றி அங்குள்ள அதாவது கொழும்பில் உள்ள கூட்டமைப் பின் அல்லது தமிழரசுக்கட்சியின் கிளை அமைப்புக்களுடன் பேசி எங்கெங்கு வாய்ப்பான இடங்கள் இருக்கின்றன எனப் பார்த்து அடுத்து கூட்டத்தில் பேசி முடி வெடுப்போம். - என்றார். (ஐ-07)

## மணல் கொள்ளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரியில் நேற்று மாலை கவனவீர்ப்புப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

சாவகச்சேரி பஸ் நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றதுடன் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கோரிசாவகச்சேரி பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

'சட்டத்தைப் பாதுகாக்கவேண் டிய பொலிஸார் என்ன வேடிக்கை பார்க்கின்றனரா?', 'வளத்தை வனாந்தரமாக்கும் வனத்திணைக் களம் எதற்காக?', தமிழர் தாய கத்தைப் பாலைவனமாக்கப் போகிறீர்களா?', 'மண் மாபியாக் களை வளர்ப்பதா அரசின் நோக் கம்?' - உள்ளிட்ட பல்வேறு வாச கங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கோசங்களையும் எழுப்பினர்.

அத்தோடு இந்த மணல் அகழ்வை நிறுத்த வேண்டுமெ ன்றும், இல்லையேல் தொடர்ந் தும் போராட்டங்கள் முன்னெ டுக்கப் போகிறார்கள் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூ ராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## எது ஐக்கியம்?

**தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?**

**ஏதேனும் ஒரு தீர்வை பெறுவதற்காக இந்த விடயத்தை எப்படித் தமிழர் தரப்பு இனி முன்நகர்த்தப் போகின்றது?**

**கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு – ஒன்றுபட்ட, பிரிக்க முடியாத, ஐக்கிய இலங்கைக்குள் இணைப்பாட்சி முறையிலான ஒரு தீர்வை அடைவதற்கு – இதய சுத்தியுடன், நேர்மையாக ஈடுபாடு காட்டிய தமிழர் தரப்பு வழமை போல ஏமாந்து வெறுங்கையுடன் மீண்டிருக்கின்றது.**

**மீண்டும் தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம், விஸ்பரூபம் எடுத்து, மேலாண்மை பெற்று, ஆர்ப்பரித்து நிற்கின்றது.**

**இந்த இலங்கைத் தீவு தனித்து சிங்கள, பௌத்தர்களுக்கு மட்டுமே உரியது என்றும் –**

**இங்கு வடக்கையும், கிழக்கையும் தாயகமாகக் கொண்டு தனியான மொழி, தனியான பாரம்பரியங்கள், சிங்களத்தினின்றும் வேறுபட்ட பண்பாடுகள், வேறுபட்ட நிலப்பரப்புகள், வெவ்வேறான வரலாறுகளைக் கொண்ட ஓர் தனித்துவமான தேசிய இனம் காலங் காலமாகத் தனது தனித்த இறைமையை அந்நிய ஆக்கிரமிப்புக்குப் பறிகொடுக்கும் வரை தக்கவைத்துப் பேணியபடி, வாழ்ந்து வருகின்றது என்ற உண்மையை ஏற்க முடியாது என்றும் –**

**இன்று அதிகாரத்தில் கோலோச்சி நிற்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதத் தலைமை அடம்பிடித்து நிற்கின்றமை கண்கூடு.**

**இந்தப் பின்புலத்தில் அடுத்துத் தமிழினம் என்ன செய்யப் பேசுகின்றது என்பதுதான் கேள்வி.**

**ஆர்ப்பரித்து நிற்கும் ஆட்சி அதிகாரத் தரப்போடு முட்டி மோதி, முரண்பட்டு, உரிமைக்காய்க் குரல் எழுப்பி, இணைப்பாட்சிக்கேனும் போராட்டத் துணிச்சலும் திராணியும், தந்திரேபாயமும் இல்லாத – வக்கில்லாத – அரசியல் தலைமைகளைத் தொடர்ந்தும் நம் தலையில் தூக்கி வைத்தபடி, பார்த்துக் காத்து, தூங்கி வழியப் போகின்றோமா?**

**இலாயக்கற்ற அதே தலைவர்களையே மீண்டும் தெரிவு செய்து, அடிமை வாழ்வுக்குள் தொடர்ந்து மூழ்கப் போகின்றோமா?**

**அல்லது சாத்தியமான வழியில் துணிச்சலுடன் எதிர்த்து நின்று, தன்னலம் பாராது காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து, தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை முன்நகர்த்தக் கூடிய துணிச்சலும், நேர்மைத் திறனும் கொண்ட பிரதிநிதிகளைத் தேர்ந்து எமது அபிலாஷைகளுக்கான தேடலை எழுச்சியுடன் தொடரப் போகின்றோமா?**

**இது குறித்துத் தமிழ் மக்கள் முடிவு செய்ய வேண்டிய ஓர் இக்கட்டான காலகட்டம் வந்திருக்கின்றது என்றே நினைக்கின்றோம்.**

**இந்த நெருக்கடியைத் தமிழினம் துணிச்சலோடு எதிர்கொள்வதற்கு தமிழர்களின் ஐக்கியம் – ஒருமைப்பாடு – முக்கியம் என்ற கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கூற்றை முழுமையாக அங்கீகரிக்கின்றோம்.**

**'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதல்ல, அதையும் தாண்டி, ஒன்றுபட்டால்தான் இங்கு, நமது தாயகத்தில், நமது இனத்தின் இருப்பே சாத்தியம் என்றளவுக்கு நிலைமை உள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.**

**ஆனால், சம்பந்தன் கூறும் ஐக்கியம் என்பது, இதுவரை தமிழர் உரிமைப் போராட்டத்தை நேர்மைத் திறனுக்கு ஏற்ப, முழுப் பயன்தரவல்ல வகையில் நகர்ந்த முடியாமல், பதவிக்கும், அதிகாரத்துக்கும், பெயர் புகழுக்கும், பணத்துக்குமாக அரசியல் செய்தவர்களை மீண்டும் பதவிக் கதிரைக் ஏற்றுவதற்கான கபட நாடகமாக அமையக் கூடாது.**

**யுத்த காலத்தில் கூட மண்ணோடும், மக்களோடும் நிற்காமல் தப்பிப் பிழைத்துத் தம் தலைகாத்துக் கொண்ட தலைவர்கள், தங்களையும் வகையறாக்களைச் சேர்த்து சில அரசியல் வியாபாரிகளையும் பதவி, அதிகாரம், செல்வாக்கில் தொடர்ந்து வைத்திருப்பதற்காகத்தான் தேர்தலுக்குத் தேர்தல் ஐக்கியம் பற்றிப் பேசுகின்றார்களோ நம் தலைவர்கள் என்ற சந்தேகம் மக்களுக்கு அதிகம் உண்டு.**

**உண்மை, நேர்மை, ஈகம், திறமை, ஆளுமை கொண்ட பலரை – இந்த மண்ணோடும் மக்களோடும் நின்ற, நிற்கின்ற உண்மைப் போராளிகளை – புறமொதுக்கி, வெட்டி வெளியேற்றி விட்டு, தம் 'செம்பு காவிகளை' ஜனநாயகத்தின் பெயரால் பதவியில் வைத்திருக்கும் எத்தனத்துக்கு வசதியாக ஐக்கியம் என்று மாய்மாலம் காட்டும் பண்பியல்பை, தாங்களே தமிழர் தலைமை என்று உரிமை கோரும் தலைவர்கள் இனியாவது கைவிட வேண்டும்.**

**உண்மை, நேர்மை, துணிச்சல், ஆளுமை ஆகியவற்றோடு செயற்படக் கூடியவர்களை அடையாளம் கண்டு அவர்களை தேர்தலில் நிறுத்துவதற்கு வசதி செய்வதே நியாயமான ஐக்கியத்துக்கு வழி செய்யும். மாறாக திறமையானவர்களை வெட்டி ஒதுக்கத் தேர்தல் முறையை வசமாகப் பயன்படுத்துவது ஒற்றுமையாகாது.**

# தமிழின விரோதச் செயல்களை எதிர்க்கவாவது ஒன்றுபடுவோம்!

## சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், டிசெ. 28

தமிழ் மக்களுக்கு விரோதமான பல்வேறு செயற்பாடுகளைப் புதிய அரசு முன்னெடுத்து வருகின்றது. இந்த நிலைமைகள் இனியும் தொடர்வதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஆகையால் இப்படிப்பட்ட விடயங்களிலாவது தமிழர் தரப்பு ஒருமித்துச் செயலாற்றவேண்டியது அவசியமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிய ஜனாதிபதி புதிய அரசு வந்திருக்கின்றது. இந்த ஆட்சியில் முன்னெடுக்கப்பட்டு வரும் பல விடயங்கள் தமிழ் மக்களுக்கு விரோதமாகவே இருக்கின்றன. இன்றைய சூழலில் நடக்கின்ற பல சம்பவங்கள் இதற்கு எடுத்துக் காட்டாகவும் இருக்கின்றன.

இன்றைய ஆட்சியாளர்கள் அதிகாரத்துக்கு வந்தால் இது போன்ற சம்பவங்கள் நடக்குவ; என்பது பலராலும் எதிர்பார்க்கப்பட்ட விடயமாக இருக்கலாம். ஆனால் அத்தனைய சம்பவங்கள் இடம்பெறுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதேபோல கடந்த ஆட்சிகளிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

ஆகவே இன்றைய ஆட்சியாளர்களும் அதே நடவடிக்கைகளை முன்னெடுப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும். அதே நேரத்தில் தமிழர்களுக்கு விரோதமாக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிராக நாங்கள் எங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும்.

குறிப்பாக தேசிய கீதத்தைத் தமிழில் பாட மாட்டோம் என்பது, தமிழர் உரிமை சார்ந்து கதைக்கும் தரப்பினர்களை விசாரணைக்கு அழைப்பது, தமிழர் உரிமை சார்ந்த விடயங்களை மறுப்பது உள்ளிட்ட பல விடயங்கள் இன்று தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்றன.

ஆகையால் அரசின் இத்தகைய செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ளாத அதே நேரத்தில் இதற்கு எதிரான நடவடிக்கைகளையும் நாங்கள் முன்னெடுக்க வேண்டும். ஆகவே தமிழ் மக்களின் நலன் சார்ந்த இந்த விடயங்களிலாவது தமிழர் தரப்பிலுள்ள அனைவரும் ஒருமித்துச் செயற்படவேண்டியது மிக மிக அவசயிமாக இருப்பதாகவே கருதுகின்றேன் – என்றார்.

(ஐ – 07)

# சம்பந்தன், சுமந்திரன் பேசும் ஐக்கியம் ஏற்கக்கூடியதல்ல!

## கூறுகின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், டிசெ. 28

ஐக்கியத்துக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர் .ஆனால் சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் பேசச் கூடிய ஐக்கியம் என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதுஅல்ல என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கியத்துக்கு நாங்கள் விரோதிகள் அல்லர். திம்பு காலத்தில் இருந்தே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஐக்கியத்துக்காக இணைந்து செயற்பட்டு வந்திருக்கின்றது. திம்பு காலத்தில் இருந்து இன்றுவரை பல்வேறுபட்ட ஐக்கியங்கள் தமிழ் மக்கள் மத்தியில் உருவாகுவதற்கு நாங்கள் காரண கர்த்தாக்களாகவும் இருந்திருக்கின்றோம். ஆகவே நாங்கள் ஐக்கியத்திற்கு எதிரானவர்கள் கிடையாது என்பதைத் தெளிவாக கூறிக் கொள்கிறோம்.

ஆனால் சுமந்திரன், சம்பந்தன் போன்றோர் பேசக்கூடிய ஐக்கியம் என்பது என்ன அடிப்படையிலானது என்று பார்க்கவேண்டும். அது உண்மையில் தமிழரசுக் கட்சியை வெல்ல வைப்பதற்கான ஐக்கியமா என்பதுதான் முதலாவது கேள்வி. அல்லது ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாப்பதற்கான ஐக்கியமா என்பதும் கேள்வி. ஆகையினால் அவை எல்லாம் தவறானவை என்று நாங்கள் கூறுகிறோம்.

ஆகவே தான் நாங்கள் ஆரம்பத்தில் இருந்து கூறிக் கொண்டிருப்பது என்னவெனில் ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணி என்று சொன்னால் அந்த ஐக்கிய முன்னணிக்கான கட்டமைப் பொன்று உருவாக்கப்படவேண்டும். அந்த ஐக்கிய முன்னணிக்கான யாப்பு இருக்க வேண்டும். அதனுடைய கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான வழிகாட்டுதல் இருக்க வேண்டும். அந்தக் கொள்கைகளை முன்னெடுத்தச் செல்வதற்கான வேலைத் திட்டங்கள் இருக்கவேண்டும். இவை எதுவுமே இல்லாமல் வெறுமனெ ஐக்கியத்தைப் பற்றிப் பேசிப் பலனில்லை.

அதிலும் குறிப்பாக நாங்கள் யாரையும் வெளியேற்றவில்லை, விரும்பியோர் வந்து சேரலாம் என்று சொல்வது அது ஒரு ஐக்கியத்துக்கான அறைகூவல் அல்ல. ஐக்கியத்துக்கான கோரிக்கையும் அல்ல. அது உண்மையாகவே மக்களை ஏமாற்றுவதற்கான செயற்பாடகத்தான் கருதுகின்றேன்.

அந்த அடிப்படையில்தான் மாற்று அணியைப் பற்றி நாங்கள் சிந்திக்கின்றோம். தமிழ் மக்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கக்கூடிய வகையில் இதில் யார் சேர்ந்து செயற்பட விரும்பினாலும் அவர்களையும் இணைத்துக் கொண்டு செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு ஏற்பட வேண்டும் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு ஏற்படவேண்டும். அவர்கள் ஒரு சுயமாக முடிவுகள் எடுத்து நடைமுறைப்படுத்தக் கூடியவர்களாக இருக்கவேண்டுமென்று பல விடயங்கள் இருக்கின்றன.

அதனை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள், ஒரு சமஷ்டி அமைப்பு முறையை முன்னெடுத்துச் செல்வதை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் அனைவரையும் நாங்கள் ஒன்றிணைத்து அதற்கான கட்டமைப்புகளையும் அதற்கான யாப்புக்களையும் உருவாக்கி முன்னெடுத்துச் செல்வோமானால் அதற்குள் பிரச்சினைகள் வருவது நிச்சயமாக குறைவாக இருக்கும் – என்றார்.

(ஐ)

**நாளை 29.12.2019 – ஞாயிற்றுக்கிழமை**

நட்சத்திரம்: திருதியை பி.ப 12.56 வரை
திதி : திருவோணம் மு.இ 9.25வரை
இராகுகாலம் : 4.58 – 6.28
சுப நேரம் : 9.28 – 10.58

# காணாமல் ஆக்கப்பட்டோரை உயிருடன் மீட்டுத் தரமுடியாது

## உதவிகள் வழங்குவோம் என்கிறார் வாசுதேவ

**கொழும்பு, டிசெ. 28**
**காணாமலாக்கப்பட்டவர்களின் உயிரை மீட்டுத் தரமுடியாது. அவர்களது குடும்பத்தாருக்கு உதவிகள் வழங்குவோம் என்று இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.**



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் நம்பிக்கையை மத்திய அரசு பெற வேண்டும். அதற்கேற்ற வகையில் மத்திய அரசு செயற்படவேண்டும். கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தத் தொடங்கவேண்டும். சிங்களவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பிக்க வேண்டும். அதேபோன்று தமிழர்களுக்குச் சிங்களத்தைக் கற்பிக்க வேண்டும். ஒருவர் கூறுவது மற்றவருக்குப் புரியவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்து எனச் சொல்லுங்கள், எமது காணிகளை மீள வழங்குங்கள், எமது வாழ்க்கைக்கான தொழிலை நடத்த கடற்படையின் தடைகள் நீக்குங்கள் என்பன தமிழ் மக்களின் கோரிக்கைகளாகும்.

அவற்றுக்கு நாம் முடிந்தளவு தீர்வுகளை வழங்கியுள்ளோம். இறுதியாக காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினையில் அவர்களின் உயிரை மீட்டுத் தரமுடியாது. அவர்களுக்காக அவர்களது குடும்பத்தாருக்கு உதவிகள் வழங்குகின்றோம் என்று கூறினோம்.

நாம் எமக்கு வாக்களித்த வடக்கு, கிழக்கு வரைபடத்தில் உள்ள சிறிய தீவுகளை விரிவுபடுத்தவேண்டும். கூறப்பட்ட பொய்கள் தெரியவந்தவுடன் நாம் எமது நடவடிக்கைகளை விரிவுபடுத்துவோம். அந்தத் தீவுகளை அடிப்படையாகக் கொண்டு எமது பணிகளை மேற்கொள்வோம் – என்றார். (ஐ)

# சிறிகாந்தா, சிவாஜி போன்றோரும் எமது கூட்டுடன் இணைந்து வருவர்

## சிவசக்தி ஆனந்தன் நம்பிக்கை



வவுனியா, டிசெ. 28

சிறிகாந்தா போன்றவர்களும் எமது கூட்டுடன் இணைந்து பயணிப்பார்கள் என ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது ஊடகவியலாளர் ஒருவர் சிறிகாந்தா தலைமையிலான குழு புதிய கூட்டணியில் இணையக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விக்கினேஸ்வரன் ஐயாவின் தலைமையில் கொள்கை சார்ந்த மாற்றுத் தலைமைக்கான கூட்டமைப்பை உருவாக்குவதற்கான பல சந்திப்புக்கள் நடைபெறுகின்றன. அதில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்குவது, யாப்பை உருவாக்குதல், கொள்கை சார்ந்து மக்களுக்கான புதிய அரசியல் தலைமை ஒன்றை உருவாக்குவது தொடர்பாக நாங்கள் நீண்ட நாள்களாக விக்னேஸ்வரன் ஐயாவுடன் ஒன்றாகப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தப் பயணத்தில் எமது கொள்கைகளை ஏற்றுக் கொண்டு வருபவர்கள் இணைந்து பயணிக்கலாம். குறிப்பாக சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் போன்றவர்களும் எமது இந்தக் கூட்டோடு இணைந்து பயணிப்பார்கள் – என்றார். (ஐ – 100)

# மன்னாரில் துப்பாக்கிச் சூடு; 2 பிள்ளைகளின் தந்தை சாவு

மன்னார், டிசெ. 28

மன்னார் – மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம் சிறுநீலாசேனை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் வியாழக் கிழமை இரவு இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் 2 பிள்ளைகளின் தந்தையான மாரி தர்மராசா (வயது – 41) எனப் பொலிஸார் கூறினர்.

இந்தக் குடும்பஸ்தர் மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில், உயிலங்குளம் சிறுநீலாசனை பகுதியில் தனிமையில் தங்கி இருந்து கூலி வேலை செய்து வந்துள்ளார்.

அவர் தங்கியிருந்த வீட்டுக்கு முன்பாக உள்ள வீதியில் சுடப்பட்ட நிலையில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார். சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து மன்னார் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சடலத்தை பார்வையிட்டனர். பின்னர் விசேட தடயவியல் நிபுணத்துவப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரனைகளை மேற்கொண்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.15 மணியளவில் மன்னார் மாவட்ட பதில் நீதவான் இ.கயஸ் பெல்டானோ சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டமையோடு, சடலத்தை மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார். (ஐ)

# குப்பைகளுடன் வந்து பிரதேச சபையை முற்றுகையிட்ட எதிரணி உறுப்பினர்கள்!



யாழ்ப்பாணம், டிசெ. 28

வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பைகளைச் சேகரித்துக் கொண்டுவந்து பிரதேச சபைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள இந்தப் பிரதேச சபையில் எதிர்க்கட்சிகளாக உள்ள சுதந்திரக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கைகோர்த்து மேற்கொண்ட இந்த நடவடிக்கையால், பிரதேச சபைக்கு முன்பாகப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பல இடங்களில் குப்பைகள் அகற்றப்படாமல் இருந்தன எனக் கூறியே, குப்பைகளுடன் இரு தரப்பும் பிரதேச சபைக்கு வந்தன.

பிரதேச சபை குப்பைகளை அள்ளாததால், அந்தப் பகுதி மக்களுடன் இணைந்து உழவு இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்திக் குப்பைகளை அகற்றினர் என அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு அகற்றிய குப்பைகளைப் பிரதேச சபைக்கு முன்பாக கொண்டுவந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர். இதன்போது சம்பவ இடத்துக்கு வந்த பிரதேச சபைத் தவிசாளர் கு.தர்சன் சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது உறுப்பினர்கள் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் நிர்வாகம் மீது கடுமையான குற்றச்சாட்டுக் களை முன்வைத்தனர். ஆயினும் இந்தக் குற்றச்சாட்டுக்களைப் பிரதேச சபைத் தவிசாளர் மறுத்திருந்தார்.

அத்தோடுஅரசியல் இலாபங்களுக்காக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இவ்வாறு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டாமென்றும் தவிசாரளர் கேட்டுக் கொண்டார். இதனையடுத்து இரு தரப்பினர்களுக்கும் இடையே வாக்குவாதங்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ – 07)





SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

# ஜேர்மனியையும், ஜப்பானையும் முந்தி இந்தியா உலகின் 3ஆவது பெரிய பொருளாதார நாடாகும்

## பொருளாதார, வணிக ஆராய்ச்சி மைய ஆய்வறிக்கையில் தெரிவிப்பு

லண்டன்,டிசெ.28

ஜேர்மனியையும், ஜப்பானையும் முந்தி இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மாறும் என பொருளாதாரம் மற்றும் வணிக ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பொருளாதாரம் மற்றும் வணிக ஆராய்ச்சி மையம் (சி.இ.பி.ஆர்.) வெளியிட்டு உள்ள ஆய்வு அறிக்கையில் இது தொடர்பாகக் கூறப்பட்டிருப்பவை வருமாறு: –

பிரெக்சிட்டுக்குப் பிறகு (ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறிய பின்னர்) உலகப் பொருளாதாரத்தில் பிரிட்டன் ஆதிக்கம் செலுத்தும். உலகில் பிரிட்டனின் நிலையை சேதப்படுத்தாது பிரிட்டன் ஒரு மேலாதிக்க உலகளாவிய பொருளாதாரமாக இருக்கும். மேலும் பிரான்ஸை விட முன்னேறி ஜேர்மனியை மாற்றியமைக்கும்.

வேகமாக வளர்ந்து வரும் இந்தியா கடந்த காலத்தில் 4 ஆவது இடத்தை பிடித்தது. இது 2019 ஆம் ஆண்டில் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக இருந்தது. இது இப்போது ஆறு ஆண்டுகளில் ஜெர்மனியையும் 2034 இற்குள் ஜப்பானையும் மாற்றியமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எரிபொருள்களிலிருந்து விலகிச் செல்லும்போது, உலகளவில் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த நாடாக சவுதி அரேபியா மாறலாம்.

2034க்குள் கனடா உலகின் எட்டாவது பெரிய பொருளாதார நாடாக இருக்கும். ஆஸ்திரேலியா ஓர் இடம் முன்னேறி 13 ஆவது இடத்திற்கு நகரும்.

உலகெங்கிலும் இருந்து திறமையான புலம்பெயர்ந்தோரை ஈர்க்கும் திறனுக்காக இரு நாடுகளும் உலகளாவிய லீக் அட்டவணையில் முன்னேறுகின்றன. ‘குடியேற்றத்தை ஈர்ப்பதில் வெற்றிகரமான நாடுகள் வேகமாக வளர முனைகின்றன’ என்று இந்த ஆய்வு அறிக்கை வலியுறுத்துகிறது.

புள்ளிகள் அடிப்படையிலான குடியேற்ற விதிகளைப் பயன்படுத்தி ஆஸ்திரேலியாவின் வெற்றி, பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சனின் இதேபோன்ற அமைப்பிற்கான திட்டங்களுக்கு ஊக்கமளிக்கிறது. இது அவரது புதிய அரசின் கொள்கைகளை விளக்கும் ராணி உரையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இங்கிலாந்தின் உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சி பல்கலைக்கழகங்கள் மற்றும் மருந்துத் துறைகள் தங்களது போட்டி விளிம்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால், இந்த மாற்றம் குறிப்பிடத்தக்கதாக இருக்கும் எனக் கூறப்பட்டு உள்ளது.

பெரும்பாலான வளர்ந்து வரும் சந்தை பொருளாதாரங்கள் நாம் கணித்ததை விட பலவீனமான பணமதிப்பை கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளை இந்தியா முந்தும். சீனா, அமெரிக்காவை முந்தும். பிரேசில், இத்தாலியை முந்தும். ஒரு வருடத்திற்கு முன்பு நாம் கணித்ததைவிட, இங்கிலாந்துமற்றும்பிரான்ஸை இந்தியா முந்திக்கொள்ளும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

2018 ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை சர்வதேச நாணய நிதியத்தால் 1,33.4 கோடியாக மதிப்பிடப்பட்டது. இது சீனாவின் 139.7 கோடிக்கும் குறைவாக இருந்தது. ஆனால் சீனாவின் மக்கள் தொகை திறம்பட கட்டுக்குள் வந்துள்ளது. அதே நேரத்தில் இந்தியாவின் மக்கள் தொகை ஆண்டுக்கு 1.3 சதவீதம் வளர்ந்து வருகிறது. 2050 ஆம் ஆண்டில் 170 கோடி மக்கள் தொகையுடன் இந்தியா உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக மாற உள்ளது. ஆனால் உழைக்கும் வயதினர் சீன மக்கள் தொகையில் வீழ்ச்சியடைந்து வருகின்றனர். இந்தியாவில் 100 கோடி கூடுதல் மக்கள் தொழிலாளர் சக்தியில் நுழைகிறார்கள்.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருடாந்திர விகிதங்கள் 2018 – 23 முதல் 7.1 சதவீதம், , 2023 – 28லிருந்து 7.1 சதவீதம் மற்றும் 2028 – 33 முதல் 7.1 சதவீதம் இருக்கும் என எதிர்பார்க்கிறோம். இந்தியா தற்போது உலகின் 7 ஆவது பெரிய பொருளாதார நாடாகும். சமீபத்திய தரவுகளின் படி, இந்தியா 2017 இல் பிரான்ஸைப் பின்னுக்குத் தள்ளி 6ஆவது இடத்திற்கு முந்தியது. ஆனால் 2018இல் மீண்டும் வீழ்ச்சியடைந்தது.

இந்த ஆண்டு உலக பொருளாதார லீக் அட்டவணையில் இந்தியா 5ஆவது இடத்தை எட்டும் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் இது 2019 இல் நடக்கும் என்று தெரிகிறது. 2025 ஆம் ஆண்டில் இந்தியா, ஜேர்மனியையும் 2030 ஆம் ஆண்டில் ஜப்பானையும் முந்திக்கொண்டு உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மாறும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். – எனக் கூறப்பட்டு உள்ளது.

### உலகளாவிய பொருளாதார கணிப்பு

| | 2019 | 2034 | | 2019 | 2034 |
|---|---|---|---|---|---|
| அமெரிக்கா | 1 | ↓ 2 | இங்கிலாந்து | 6 | = 6 |
| சீனா | 2 | ↑ 1 | பிரான்ஸ் | 7 | = 7 |
| ஜப்பான் | 3 | ↓ 4 | இத்தாலி | 8 | ↓ 14 |
| ஜெர்மனி | 4 | ↓ 5 | பிரேசில் | 9 | = 9 |
| இந்தியா | 5 | ↑ 3 | கனடா | 10 | ↑ 8 |

| இந்தியா | 2003 | 2008 | 2013 | 2018 | 2019 | 2023 | 2028 | 2033 |
|---|---|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டு உற்பத்தி ரூபாயில் | 46624 | 68493 | 98014 | 139476 | 149379 | 196355 | 276687 | 389884 |
| உள்நாட்டு உற்பத்தி டாலரில் | 808.6 | 1401.5 | 1969.7 | 2626.5 | 2818.8 | 3734.9 | 5299.5 | 8002.7 |
| உள்நாட்டு உற்பத்தி டாலரில் (தற்போது) | 618.4 | 1224.1 | 1856.7 | 2687.5 | 2945.7 | 4206.6 | 6567.7 | 10913.0 |
| ரேங்க் | 12 | 12 | 10 | 7 | 5 | 5 | 4 | 3 |

# டெல்லியில் நான்கு மாடி கட்டடத்தில் பயங்கரத் தீ விபத்து; 40 பேர் தப்பினர்

டெல்லியின் கிழக்குப் பகுதியான கிருஷ்ணா நகரில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தால் பற்றி எரியும் கட்டடத்தில் சிக்கிய 40 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

அனாஜ் மண்டி எனுமிடத்தில் டிசம்பர் 8ஆம் திகதி நிகழ்ந்த கோரமான தீவிபத்தில் 45 பேர் உயிரிழந்தனர். இதே போன்று மக்கள் நடமாட்டம் மிக்க நெரிசலான குடியிருப்பு பகுதியில் அமைந்த 4 மாடி கட்டடத்தின் தரைதளத்தில் இருந்த பழைய பிளாஸ்டிக் கழிவு கிடங்கு ஒன்றில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

அனாஜ் மண்டி சம்பவத்தை போல் இதிலும் 50க்கும் மேற்பட்டோர் தீயில் சிக்கி உதவிகேட்டு அலறினர். தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

சிலர் தாங்களாகவே தப்பி வந்த நிலையில் தீயணைப்பு வீரர்கள் 40 பேரை உயிருடன் மீட்டனர். இதனால் பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டடத்தின் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.




# இலங்கையில் சிங்களத்தில் மட்டும் தேசிய கீதம்; மோடியைத் தலையிடக் கோருகிறார் ஸ்டாலின்!



சென்னை,டிசெ.28

இலங்கையில் சுதந்திர தினத்தன்று சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் பாடப்படும் என்ற உத்தரவு கவலையளிக்கிறது. இத்தகைய செயல்பாடுகள் இலங்கையில் வாழும் தமிழர்களை மேலும் ஒதுக்கி வைக்கும்.

இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட வேண்டும் என இந்திய பிரதமர் மற்றும் வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரைக் கேட்டுக் கொள்கிறேன்.

– இப்படிக் கோரியிருக்கின்றார் தமிழக எதிர்க்கட்சித் தலைவரும் தி.மு.க. தலைவருமான மி.க.ஸ்டாலின்.

இலங்கை அரசின் முடிவு குறித்து தமிழகத்திலும் அரசியல் தலைவர்கள் பல்வேறு விமர்சனங்களைச் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் மேற்படி கருத்தைப் பதிவிட்டுள்ளார்.

# மோடியால் இரு தரப்பு உறவு மேம்பாடு சீனப் பாதுகாப்பு அமைச்சகம் பாராட்டு



பெய்ஜிங்,டிசெ.28

பிரதமர் மோடியின் முயற்சியால் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான இராணுவ உறவு மேம்பட்டிருப்பதாக, சீனப் பாதுகாப்பு அமைச்சகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

பெய்ஜிங்கில் இந்தப் பாராட்டைத் தெரிவித்துள்ள சீன பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் யு கியான், பிரதமர் மோடி மற்றும் சீன அதிபர் ஜீ ஜின்பிங் ஆகியோருக்கு இடையே முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுகள் நடந்துள்ளமையைச் சுட்டிக் காட்டினார்.

இதற்காகப் பிரதமர் மோடிக்கு சீன இராணுவம் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே உள்ள 3 ஆயிரத்து 488 கிலோ மீற்றர் கட்டுப்பாட்டுஎல்லைக்கோட்டை பாதுகாப்பதில் கடினமாக பிரச்சினைகள் நிலவுகின்றன.

இந்த நிலையில் இரு நாட்டு இராணுவங்களும் சுமுகமான உறவை மேற்கொள்ள, மோடி மற்றும் ஜி ஜின்பிங்கின் பரஸ்பர புரிதல் உதவிகரமாக இருப்பதாக யு கியான் கூறி இருக்கிறார்.

# அகதிகள் படகு கவிழ்ந்ததில் துருக்கியில் ஏழு பேர் மரணம்

## 64 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்





அங்காரா,டிசெ.28

துருக்கியில் அகதிகள் சென்ற படகு கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதில் 7 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

சொந்த நாட்டில் அடக்கு முறை, வாழ்வாதாரம் பாதிப்பு உள்ளிட்ட காரணங்களால் ஆபிரிக்கா, சிரியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து துருக்கி மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக பலர் செல்கின்றனர். கடல் வழியாக ஆபத்தான பயணங்களை மேற்கொள்ளும் இவர்கள் சில சமயங்களில் விபத்தில் சிக்கிக்கொள்ளும் நிகழ்வுகள் அவ்வப்போது நடந்து வருகின்றன.

இந்நிலையில் துருக்கிக்கு அகதிகளாக 71 பேரை ஏற்றிச்சென்ற படகு ஒன்று கிழக்கு பிட்லிஸ் மாகாணத்தில் உள்ள வான் என்ற ஏரியில் சென்ற போது எதிர்பாராத விதமாக கவிழ்ந்தது.

இது குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். ரப்பர் படகுகள் உள்ளிட்ட மீட்பு உபகரணங்கள் மூலம் 64 பேர் காப்பாற்றப்பட்டனர். இந்த சம்பவத்தில் 7 பேர் பலியாகினர்.

இவர்கள் அனைவரும் பாகிஸ்தான்,ஆப்கானிஸ்தான் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளில் இருந்து துருக்கிக்கு அகதிகளாக வந்தவர்கள் என்று துருக்கி நாட்டின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# பிலிப்பீன்ஸில் கிறிஸ்மஸ் தினம் புயலுக்கு 28 பேர் பலி; மேலும் பலரைக் காணோம்!

மணிலா,டிசெ.28

பிலிப்பீன்ஸின் மத்திய பகுதியில் உள்ள பல தீவுகளை புதனன்று சக்திவாய்ந்த புயல் தாக்கியது.'பான்போன்' எ பெயரிடப்பட்ட இந்த புயலுக்கு 28 பேர் பலியாகினர்.

மணிக்கு 190 கி.மீ. வேகத்தில் பலத்த சூறாவளி காற்று வீசியது. இதன் காரணமாக கடலோர பகுதிகளில் இடைவிடாது கனமழை கொட்டித் தீர்த்தது.



புயல் மற்றும் கனமழையால் லொயிலோ மற்றும் கபிஸ் ஆகிய மாகாணங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளன. அங்கு புயலில் சிக்கி ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகின.

பலத்த காற்று வீசியதில் நூற்றுக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. சாலையோரம் இருந்த மின்கம்பங்களும் சரிந்து விழுந்தன. இதனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கி உள்ளன. கனமழையை தொடர்ந்து நீர் நிலைகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஊர்களுக்குள் தண்ணீர் புகுந்து கரைபுரண்டோடுகிறது. சாலைகளில் வெள்ளம் ஆறாக ஓடுவதால் வாகனப் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டு உள்ளது.

மேலும் புயல் காரணமாக ரெயில் மற்றும் விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது. அதுமட்டும் இன்றி புயல் தாக்கிய பகுதிகளில் கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதால் கப்பல் போக்குவரத்தும் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது.

புயல், கனமழையைத் தொடர்ந்து லொயிலோ மற்றும் கபிஸ் மாகாணங்களில் பல்வேறு இடங்களில் பயங்கர நிலச்சரிவும் ஏற்பட்டது. இதில் பல வீடுகள் மண்ணோடு மண்ணாக புதைந்தன.

'பான்போன்' புயலுக்கு இதுவரை 16 பேர் பலியானதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் பலர் மாயமாகி உள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை.

கிறிஸ்துமஸ் தினத்தன்று தாக்கிய 'பான்போன்' புயல் மக்களின் கொண்டாட்டங்களைச் சீர்குலைத்து, அவர்களை சோகத்தில் ஆழ்த்தியது. சுமார் 60 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாகி உள்ளனர்.

புயல் பாதித்த பகுதிகளில் பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு முழு வீச்சில் மீட்பு பணிகள் நடந்து வருகின்றன.

'பான்போன்' புயல் இந்த ஆண்டு பிலிப்பீன்ஸைத் தாக்கிய 21 ஆவது புயல் ஆகும். அதே சமயம் இந்த புயல் கடந்த 2013ஆம் ஆண்டுக்கு பிறகு பிலிப்பீன்ஸைத் தாக்கிய மிகவும் சக்தி வாய்ந்த புயல் என்றும் கூறப்படுகிறது.

2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிலிப்பீன்ஸைத் தாக்கிய ஹையான் என்ற சக்தி வாய்ந்த புயல் 6 ஆயிரத்துக்கும் அதிகமானோரைப் பலி கொண்டது நினைவு கூரத்தக்கது.

# ஈரானில் அணு உலை அருகே நேற்று சக்தி மிக்க நிலநடுக்கம்

தெஹ்ரான்,டிசெ.28

ஈரானில் உள்ள புஷேர் அணு உலை அருகே நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 5.1 என்று பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஈரானில் உள்ள புஷேர் அணு உலைக்கு 53 கிலோ மீற்றர் கிழக்கே மையமாக கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டது. வெள்ளிக்கிழமை காலை 5.23 மணியளவில் இந்த பூகம்பம் ஏற்பட்டுள்ளது. பூமிக்கு அடியில் 38 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளதால் கொஞ்சம் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஈரான் அரசு ஊடகம் இந்த நிலநடுக்கம் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை, ஆனால் புஷேர் அணு உலை இதைவிடவும் சக்தி வாய்ந்த நிலநடுக்கத்திலும் ஒன்றும் ஆகாத விதமாக பாதுகாப்பாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் முக்கியமான நில நடுக்கத் திட்டில் இருப்பதால் நிலநடுக்கங்கள் இங்கு ஏறக்குறைய தினசரி செய்திதான்.



2003 ஆம் ஆண்டு 6.6 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தினால் பாம் என்ற நகரம் தரைமட்டமானது. சுமார் 26,000 பேர் இதில் பலியாகினர். பாம் நகரம் புஷேர் அணு உலைக்கு அருகில்தான் உள்ளது. ஆனால், இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கத்தினால் அணு உலைக்கு அப்போது எந்த ஆபத்தும் ஏற்படவில்லை.

# கஜகஸ்தானில் 100 பயணிகளுடன் புறப்பட்ட விமானம் மேலெழ முடியாமல் கட்டடத்துடன் மோதி நொறுங்கியது

## ஆறு குழந்தைகள் உட்பட 15 பேர் சாவு; 60 பேர் தப்பியமை உறுதி



அல்மத்தி,டிசெ.28

கஜகஸ்தான் நாட்டில் நேற்றுக் காலை 7.20 மணியளவில் 100 பேருடன் புறப்பட்ட விமானம் மேலெழ முடியாமல் கட்டடம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஆறு குழந்தைகள் உட்பட குறைந்தது 15 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் விமானத்திலிருந்தவர்களில் குறைந்தது 60 பேர் உயிர் பிழைத்தனர் என்பதை உறுதி செய்ய முடிந்தது.

மத்திய ஆசிய நாடுகளில் ஒன்றான கஜகஸ்தானில் உள்ள அல்மத்தி நகரில் இருந்து தலைநகர் நுர்சுல்தன் நகருக்கு பயணிகள் விமானம் ஒன்று புறப்பட்டது. இந்த விமானத்தில் 95 பயணிகள் 5 விமான சிப்பந்திகள் என மொத்தம் 100 பேர் இருந்தனர். விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில், விமான நிலையம் அருகே இருந்த 2 மாடி கட்டடத்தில் அது மோதி விபத்துக்குள்ளானது.

விமானம் போதிய உயரத்தை எட்ட முடியாததே கட்டடத்தின் மீது அது மோதி விபத்துக்குள்ளானதற்குக் காரணம் என முதற்கட்டத் தகவல்கள் கூறுகின்றன.



விபத்தையடுத்து, நிகழ்விடத்திற்கு மீட்புக்குழுவினர் விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில், 15 பயணிகள் உயிரிழந்திருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.



- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

# பாவிகளை மன்னிப்பீராக!

**மதமாற்ற சர்ச்சை தொடர்பாக கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் வரையும் வாராந்தக் கட்டுரைத் தொடரின் ஐந்தாவது இறுதி அங்கம் இது.**

**(சென்றாம் வாரம்)**
**தாம் உயர்வென்று நினைத்த ஒரு கருத்தை, உலகத்தார்க்கு உபகரிக்க நினைப் பதில் கூட தப்பில்லை. பெரிய பிழை எதுவென்றால், அன்பையும் பொறுமையையும் உலகிற்கு உபதேசித்த, ஒரு மகானின் வழிவந்தவர் களாய்ச் சொல்லிக்கொண்டு, மதப் பலத்தைப் பெருக்குவதற்காக, மனிதர்களுக்கிடையே வெறுப்பையும் பகையையும் உருவாக்கும், இவர் களது செயலேயாம். இதுவே சகிக்கமுடியாத விடயமாய் இருக்கிறது. அச்சம்பவங்கள் பற்றி அடுத்தவாரம் சொல்கிறேன்.**

உலகைத் தம் வயப்படுத்த,
இம்மதத்தார் கையாளும் சில வழிமுறைகள் மனதுக்கு வேதனை தருவன.
ஏதாவது ஓர் பிரதேசத்தில் மக்கள் தொகையால் தாம் பலம்பெறும் வரையில்,
எல்லார் துன்பங்களிலும் பங்கேற்பதும்,
எல்லார்க்காகப் பிரார்த்திப்பதுமாக,
சாத்விகத்தின் உச்சப் பிரதிநிதிகளாய் இவர்கள் காட்சி கொடுப்பர்.
அதே பிரதேசத்தில் மக்கள் தொகையால் தாம் பலம் பெற்றதை அறிந்ததும்,
இவர்தம் இராஜச குணம் வெளிப்படத் தொடங்கிவிடும்.
வெளிப்படையாகவே மற்றைச் சமயங்களோடு முரண்படும் முயற்சியில் ஈடுபடுவர்.
ஓர் எல்லையில் இவர்கள் தம் நோக்கம் நிறைவேற்ற வன்முறையைத் தொடவும் தயங்கார்.
இங்ஙனமாய் இவர்கள் செய்துவரும் சில அற்பத்தனமான செயற்பாடுகள்,
தமிழ்ப்பிரதேசத்தில் இந்துமதத்தவர்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றன.

*****

சான்றின்றிப் பேசுவதாய் நினைப்பீர்கள்.
உதாரணத்திற்காய் சில சம்பவங்களைச் சொல்கிறேன்.
மேற்சொன்ன வகையில் தமது பலத்தை இவர்கள் பெருக்கிக் கொண்ட,
தமிழ்ப் பிரதேசங்களில் மன்னார்ப்பிரதேசமும் ஒன்றாகும்.
நம்நாட்டில் இந்திய சமாதானப்படை நிலைகொண்டிருந்தபோது,
அப்படையில் இருந்த சில இந்துப் போர்வீரர்கள்,
தமது வழிபாட்டிற்காய் மன்னார் கச்சேரிக்குப் பின்னால் அமைந்திருந்த,
அரசாங்க நிலத்தில் ஓர் வைரவர் சூலத்தை நாட்டி வழிபட்டனர்.
அது அமைக்கப்பட்டபோது அந்த இராணுவத்தினரின் பலம் கருதி,
எல்லோரும் ஏதும் பேசாது இருந்துவிட்டனர்.
பின்னாளில் இந்திய இராணுவம் வெளியேறிய பின்பும்,
அப்பிரதேச இந்துமக்களால்,
அவ் வழிபாட்டிடம் ஆலயமாகவே போற்றப்பட்டு வந்தது.

*****

அவ்வாலயம் அமைக்கப்பட்டு பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்பாக,
சிலரது தூண்டுதலால் அப்போது அரச அதிபராக இருந்த ஒரு கிறிஸ்தவர்,
அவ்வாலயத்தை அகற்றவேண்டுமென நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.
அக்காலத்தில் அங்கு நீதிபதியாக இருந்தவர் ஆளுமையாளர் எனப் பெயர்பெற்ற,
நீதிபதி இளஞ்செழியன் ஆவார்.
அவர் அந்த வழக்கை நன்கு ஆராய்ந்த பிறகு,
பன்னிரண்டு ஆண்டுகள் வழிபாட்டிடமாய் இருந்துவிட்டபடியால்,
அக்கோயிலை அவ்விடத்திலிருந்து அகற்றமுடியாது எனத் தீர்ப்பளித்தார்.

*****

அப்போது அங்குள்ள சில கிறிஸ்தவ மதத் தலைவர்கள்,
அது அரச நிலத்தில் கட்டப்பட்டிருக்கிறது என்று வாதாட,
அப்படியானால் இதே மன்னாரில்,
22 இடங்களில் அரச நிலத்தில் மாதா சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.
அவற்றையும் அகற்ற நீங்கள் தயாரா? என்று கேட்டு,
அவர்கள் கருத்தை நிராகரித்து இருக்கிறார் நீதிபதி.
அதைச் சகிக்காத இம்மதத்தலைவர்கள் சிலர்,
தம் மதத்தவரை ஒன்று திரட்டி இவ்வாலயத்தை அகற்றவேண்டுமென,
பெரும் மௌன ஊர்வலம் ஒன்றினையே நடத்தினராம்.
இது முன்பு நடந்தவிடயம்.

*****

தமது மதத்திற்கோ மதஸ்தலத்திற்கோ இடையூறு ஏற்பட்டால்கூட,
மற்றோர் மத ஆலயத்தை அகற்றும்படி கோருவதில் நியாயம் இருப்பதாய்க் கருதலாம்.
அப்படி ஏதுமே இல்லாமல், ஒரு மாற்று மதத்தின் ஆலயத்தை அகற்றவேண்டுமென,
மதத் தலைவர்களே முன்னின்று ஊர்வலம் நடத்துவதும்,
எதிர்ப்பைக் காட்டுவதும் எந்தவிதத்தில் நியாயமாகும்?
இது மக்கள் மத்தியில் மதப்பகையை ஏற்படுத்தும் விடயமாகிவிடாதா?
இக்காரியத்தை எந்த மதத்தவர் செய்தாலும் அதனைத் தவறென்றே நான் உரைப்பேன்.

*****

இங்ஙனமாய் மாற்று மதத்தாரின் மனதை நோகச் செய்த,
இம்மதத்தாரின் வேறொரு செயல் பற்றிச் சொல்கிறேன்.
இச்சம்பவமும் மன்னாரிலேயே நடந்தது.
இந்துமக்களின் பாடல்பெற்ற புராதன தலமாகிய,
திருக்கேதீச்சரத்தில் நடந்த இச்சம்பவம் பற்றி,
ஊடகங்கள் அனைத்தும் புகைப்படச் சான்றுகளோடு செய்திகள் வெளியிட்டன.

*****

திருக்கேதீச்சர ஆலயத்திற்கு அண்மையிலுள்ள நிலப்பரப்பினுள்,
ஆலயத்திற்கான ஓர் தற்காலிக வரவேற்பு வளைவு அமைந்திருந்தது.
அந்தத் தற்காலிக வரவேற்பு வளைவை, கடந்த சிவராத்திரி விரத நிகழ்வையொட்டி,
ஆலய நிர்வாக சபை சற்று ஸ்திரப்படுத்த முடிவு செய்து,
அதன் அத்திவாரத்தைப் பலம் செய்யும் வேலைகள் தொடங்கியிருந்தன.
அந்நேரத்தில்,
திருக்கேதீச்சர ஆலயம் நோக்கிய வீதியில்,
நம்மவர் அமைக்கத் தொடங்கிய அவ் அலங்கார வளைவினை,
அருகில் தாம் இடைக்காலத்தில் அமைத்திருந்த,
தமது சிறிய ஆலயத்தைக் காரணம் காட்டி எதிர்ப்புத் தெரிவித்து,
ஒரு பாதிரியார் தலைமையில் அம்மதத்தைச் சார்ந்த சிலபேர்,
அட்டூழியமாக உள்நுழைந்து அவ்வளைவை உடைத்ததோடு,
நம் நந்திக்கொடி போன்ற சமய சின்னங்களையும்,
காலால் மிதித்து அவமரியாதை செய்து அதிர்ச்சியூட்டினர்.

*****

எல்லா மதங்களிலும் தீவிரவாதத்தன்மை உள்ளவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.
அத்தகைய ஒருசிலரால் இச்சம்பவம் நடந்ததோ என்று சிலர் ஐயுறலாம்.
ஆனால் அது அங்ஙனமன்று என்பதை,
இன்றுவரை அவ்வளைவு கட்டுவதற்கு எதிர்ப்புக் காட்டி நிற்கும்,
அம்மதத் தலைமைப்பீடத்தார்தம் செயற்பாடுகள் உறுதிசெய்கின்றன.

*****

அதுமட்டுமன்றி,
அவ்வளைவை உடைத்த பாதிரியார் உட்பட்டவர்களை,
மேற்படி மதத்தாரின் தலைமைப்பீடம்,
இன்றுவரை கண்டித்ததாயும் தெரியவில்லை.
தனிப்பட்ட ஒரேயொரு உயர் பாதிரியார் வெளியிட்ட,
நீதியோடு கூடிய கண்டனத்தை மட்டும்,
ஒரு பத்திரிகையில் படித்ததாய் ஞாபகம்.
பிறகு அவர்தம் குரலும் அடக்கப்பட்டுவிட்டது என்று நினைக்கிறேன்.

*****

திருக்கேதீச்சர ஆலயத்தின் வரலாற்றுத் தொன்மை எங்கே?
இடையில் வந்த இம்மதத்தாரின் தொன்மை எங்கே?
அவர்களுக்கென விரிந்த நிலப்பரப்போடு மடுமாதா கோயில் அவ்வூரிலேயே அமைந்திருக்க,
திருக்கேதீச்சர எல்லைக்குள் வலியக் கொழுவி
முரண்பட்டு நிற்கும் இவர்தம் கீழ்மைச் செயல்களை,
எங்ஙனம் ஜீரணிப்பது?

*****

தமிழினத்தின் தலைவர்கள் எனச் சொல்லிக்கொள்வோர்,
இப்பிரச்சினை நடந்தபோது,
துணிந்து இதில் தலையிட்டு இப்பிரச்சினைக்கு,
நேர்மையான தீர்வு காணாமல் இருந்தது மிகப்பெரும் வேதனை.
ஒட்டுமொத்த தமிழினத்தின் பிரச்சினை நோக்கி,
தமிழ்மக்கள் போராடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில்,
மதப்பிரச்சினை என்ற ஒன்றை அவர்களுக்கிடையிற் புகுத்தினால்,
நம் இனப்பிரச்சினையின் வலிமை குறையும் என்பதைக் கூட,
நம் தலைவர்கள் உணராது மௌனித்திருந்தது பெரிய கொடுமை.
இனத்தைப் பிரிக்கும் இவ்விடயத்தை,
அம்மதத் தலைவர்கள் மட்டுமல்ல,
நம் இனத்தலைவர்களும் கூட புரியாததுதான் ஆச்சரியம்.

*****

அப்பிராந்தியத்தைச் சேர்ந்த,
கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவர்,
இப்பிரச்சினை பற்றி அறிக்கை விட்டபோது,
தன்னை தமிழினத்தின் பிரதிநிதியாய் அன்றி,
கிறிஸ்தவ மதத்தின் பிரதிநிதியாய்க் கருதியது வெளிப்படையாய்த் தெரிந்தது.

*****

இவ்விடயத்தில் கூட்டமைப்பைச் சார்ந்த,
சுமந்திரன் அவர்களின் செயற்பாடு ஒன்றே மனதிற்குச் சற்று ஆறுதல் தந்தது.
திருக்கேதீச்சர கோயிலின் சார்பில் வழக்குத் தொடுத்து,
அண்மையில் அவர் நீதிமன்றத்தில் ஆற்றிய நேர்மையான உரையைப் பலரும் பாராட்டினார்கள்.
கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவராய் இருந்த பொழுதும்,
நீதிக்காகக் குரல் கொடுத்த அவரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

*****

(11ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா விபத்தில் இளைஞன் படுகாயம்



வவுனியா, டிசெ. 28

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞரொருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமந்தைப் பகுதியில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த கப் ரக வாகனத்துடன், வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# 300 பேரின் உடற்பாகங்கள் 15 வருடங்களாக பாதுகாப்பு

ஆழிப்பேரலையின் போது உயிரிழந்தவர்களில், அடையாளம் காணப்படாத 300 பேரின் உடற்பாகங்கள், 15 வருடங்களாகக் காலி – கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலை அதிகாரி பீ.ருவன்புர தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர், 1,200 பேரின் சடலங்கள் கராப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இதன்போது, 200 பேரின் சடலங்களை அப்பகுதிக் கிராம அலுவலர் அடையாளம் கண்ட பின்னர் உறவினர்களால் அந்தச் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன. பின்னர், மேலும் 500 சடலங்கள் அடையாளம் காணப்பட்ட போதிலும் 450 சடலங்களை அடையாளம் காண்பதற்கு எவரும் முன்வரவில்லை.

இதனையடுத்து சடலங்களைப் புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தியதன் பின்னர், உடற்பாகங்களின் மாதிரிகள் கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆவணப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சடலங்களில் 150 சடலங்கள், உறவினர்களின் ஆதாரங்களுடன் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையிலேயே, எஞ்சிய சடலங்களின் உடற்பாகங்கள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.(ஐ)

# 42 ஏக்கரில் கஞ்சா சிக்கியது!



கொழும்பு, டிசெ.28

யால வனப்பகுதியில் 42 ஏக்கர் கஞ்சாத் தோட்டத்தை அழித்துள்ளனர் விசேட அதிரடிப்படையினர்.

இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்தினம் யால வனப் பகுதியில் தேடுதல் நடத்திய அதிரடிப்படையினரிடம் கஞ்சாத் தோட்டம் சிக்கியது.

அங்கு 8,500 க்கும் அதிகமான கஞ்சாத் செடிகள் காணப்பட்டன. ஒவ்வொன்றும் ஒன்று முதல் ஆறு அடி உயரம் வரை இருந்தன.

கஞ்சாத் தோட்ட உரிமையாளர் இதுவரை கைது செய்யப்படவில்லை. (ஐ)

## காங்கேசன் – காரைக்கால் இடையே படகுச் சேவை ஆரம்பிக்கப் பேச்சு



கொழும்பு, டிசெ. 28

காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையில் படகுச் சேவை ஆரம்பிப்பது குறித்து இந்திய மத்திய அரசின் கப்பல் துறை அமைச்சர் மான்சுக் மாண்டவ்யா தலைமையில் பேச்சு நடந்துள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய அரசின் கப்பல்துறை, வெளியுறவுத்துறை, உள்துறை அதிகாரிகளுடன் இப்படகு சேவையை தொடர்ச்சியாக நடத்த உத்தேசித்துள்ள எயர்கொம் ட்ராவல்ஸ் அன்ட் ருவர்ஸ் தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் நிரஞ்சன் நந்தகோபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பரீட்சார்த்த படகுச் சேவையொன்றை விரைவில் ஆரம்பிப்பது குறித்து தற்போது ஆராயப்படுகிறது. (ஐ)

# வெள்ளைவான் கடத்தல்களை நானும் நன்கு அறிந்துள்ளேன்!

## விக்கிரமபாகு பரபரப்புத் தகவல்

கொழும்பு, டிசெ. 28

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின்போது வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றதை நான் நன்கறிவேன் என நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின்போது வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றமையை நான் நன்கறிவேன். அதனால் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் என்னைத் தொலைபேசியின் ஊடாகத் தொடர்புகொண்டு பேசியுமிருந்தார்.

நாம் அத்தகைய கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்பட்டு வந்தோம். எனவே மஹிந்தவின் ஆட்சியில் அத்தகைய சம்பவங்கள் எவையும் நடைபெறவில்லை என்று எவராலும் மறுத்துவிட முடியாது.

வெள்ளை வான் விவகாரம் தொடர்பில் அம்பலப்படுத்திய ராஜித சேனாரத்னவை ஆபத்திற்குள்ளாக்கி, தொடர்ந்தும் வெள்ளை வான் கலாசாரத்தை நாட்டின் முன்னெடுத்துச் செல்லலாம் என்றும், ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும்



உடைத்தெறிந்துவிட்டு முன்நோக்கிப் பயணிக்க முடியும் என்று ஒருபோதும் கருதவேண்டாம் – என்றார். (ஐ)

# கணவனை மிரட்ட முயன்ற பெண் தீயில் எரிந்து மரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

உயிரை மாய்க்கப் போவதாகக் கணவனை மிரட்டிய இளம்பெண் தீயில் எரிந்து காயமடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்தார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த 29 வயதான கஜீபன் கீர்த்தனா என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கணவனுக்கும் மனைவிக்குமிடையில் தொடர்ச்சியாக முரண்பாடுகள் ஏற்பட்டு வந்துள்ளன. இந் நிலையில் கடந்த மாதம் 18ஆம் திகதி கணவனுக்கு முன்பாக மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொள்ளப் போவதாக மனைவி மிரட்டியுள்ளார்.

அப்போது எதிர்பாராதவிதமாக மனைவியின் உடலில் தீ பற்றி எரிந்தது. தீக் காயங்களுக்குள்ளான பெண்ணை உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அதிகாலை அவர் உயிரிழந்தார்.

இந்த உயிரிழப்புத் தொடர்பான விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



காலைக்கதிர் Kalaikathir



# ஜேம்ஸ் அண்டர்சன் சாதனை

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 150 போட்டிகளில் விளையாடிய ஒரே வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையை இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் அண்டர்சன் பெற்றுள்ளார்.



தென்னாபிரிக்கா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி செஞ்சூரியனில் நேற்று முன் தினம் தொடங்கியது.

இதில் இங்கிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் இடம் பிடித்திருந்தார்.

இது அவருக்கு 150ஆவது டெஸ்ட் போட்டியாகும். இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலேயே 150 டெஸ்ட் போட்களில் விளையாடிய ஒரே வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இவர் 149 போட்டிகளில் 575 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார்.

2003ஆம் ஆண்டு ஸிம்பாப்வே அணிக்கெதிராக லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஜேம்ஸ் அறிமுகம் ஆனார்.

சமீபத்தில் ஆஷஸ் தொடரின்போது காயத்தால் வெளியேறினார். அதன்பின் தற்போது அணிக்கு திரும்பியுள்ளார்.

இதற்கு அடுத்த இடத்தில் ஆஸ்திரேலியாவின் மெக்ராத் (563 விக்கெட்கள்) 124 போட்டிகளிலும், மேற்கிந்தியத் தீவுகளின் வால்ஷ் (519 விக்கெட்கள்) 132 போட்டிகளிலும் விளையாடி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பாகிஸ்தான் வீரர் காட்டம்

தன் திறமை மூலம் பாகிஸ்தான் அணிக்கு பல வெற்றிகளைப் பெற்று தந்த சுழற்பந்து வீச்சாளர் தானிஷ் கனேரியா அணியில் இருந்தபோது மதம் ரீதியாக அவர் பல இன்னல்களைச் சந்தித்ததார் எனத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

"சிலர் என்னைச் சமூகத்தில் எதிர்த்தனர். ஆனால், அவர்களின் எதிர்ப்பு என்னை ஆதரித்தவர்களின் அன்புக்கு முன்னால் ஒன்றும் இல்லாமல் ஆனது.

நான் எனது வாழ்க்கையில் எப்போதும் பொசிட்டிவாக இருக்க விரும்புவேன். அதனால் எதிர்ப்புகளை புறம் தள்ளிவிடுவேன்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தொலைக்காட்சியுடாக பேசிய ஷோயப் அக்தர் உண்மையை உலகுக்கு உரக்கச் சொன்னார் அவருக்கு தனிப்பட்ட முறையில் எனது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

அதே நேரத்தில் என்னை ஆதரித்த, எனக்கு ஊக்கம் அளித்த அனைத்து வீரர்களுக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன். எனது மதத்தைத் தாண்டி என்னை ஆதரித்த சக வீரர்கள், ரசிகர்கள் என அனைவருக்கும் நன்றிகள்.

மேலும் அணியில் இருந்தபோது மத ரீதியாக தான் அனுபவித்த இன்னல்களை வெளிப்படையாகச் சொல்ல தைரியம் இல்லாமல் இருந்தது. ஆனால் மத ரீதியாகத் என்னை ஒதுக்கி வைத்த வீரர்களின் பெயர்களை விரைவில் வெளியிடுவேன்.'- என கனேரியா கூறியுள்ளார்.

# டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு ரஹானே எதற்காக மாறினார்?

இந்தியக் கிரிக்கெட் அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரரான அஜிங்கியா ரஹானே, ஐ.பி.எல். தொடரில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு மாறியமை ஏன் எனக் கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த 9 வருடங்களாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடி வந்த முன்னணி துடுப்பாட்ட வீரரான அஜிங்கியா ரஹானே, எதிர்வரும் 2020ஆம் ஆண்டு டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார்.

இந்த நிலையில் இதுகுறித்து அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

"எனது மனதில் அடுத்த அணிக்காக விளையாட வேண்டும் போன்ற எந்தச் சிந்தனையும் உதிக்கவில்லை. டெல்லி கப்பிட்டல்ஸ் அணி, அவர்களுக்காக நான் விளையாட வேண்டும் என்று விரும்பியது.

கற்றுக் கொள்ளவும், ஒரு வீரராக வளரவும் கிடைத்த வாய்ப்பு என்று எண்ணினேன். நீண்ட வருடமாக விளையாட வாய்ப்பு கொடுத்த ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு நன்றி சொல்லியாக வேண்டும். 2019 சீசன் மத்தியில் நடந்த சம்பவங்கள் எனக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தன.

கிரிக்கெட் எப்போதுமே 'டீம் ஸ்போர்ட்' என்று நம்புகிறவன் நான். ஒரு வீரரின் தவறால் நீங்கள் தோல்வியடைய மாட்டீர்கள். அதேபோல், ஒரு வீரரின் சிறந்த திறமையால் வெற்றி பெற முடியாது. நீங்கள் என்னைக் குற்றம்சாட்ட நினைத்தால், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்கிய பின்னர், என்னுடைய நெருக்கமான நண்பர்களிடம் உட்கார்ந்திருந்தேன். ஆனால், அணித்தலைவர் பதவி குறித்து எந்த விடயத்தையும் நான் பேசவில்லை. நான் எப்படித் துடுப்பெடுத்தாட வேண்டும் என்பது குறித்து முடிவு செய்தேன்.

ஆக்ரோஷமான துடுப்பாட்டத்தை நேர்மறையாக சிந்தனை யுடன் விளையாட வேண்டும் என்ற நோக்கத்துடன் களம் இறங்கினேன். அதனடிப்படையில் என்னுடைய திறமை வெளிப்பட்டது எனக் கூறினார்.

இந்தியா அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடிவரும் துணைத் தலைவரான அஜிங்கியா ரஹானே, கடந்த 2011ஆம் ஆண்டு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இணைந்தார்.

அஜிங்கியா ரஹானே, 2018ஆம் ஆண்டு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி இரண்டு ஆண்டுகள் தடையில் இருந்து மீண்டு வந்த போது அணியின் தலைவராக அறிவிக்கப்பட்டார். அந்த சீசனில் ராஜஸ்தான் அணி 'பிளே ஒவ்' சுற்றுக்கு முன்னேறியது.

அதன் பின் 2019ஆம் ஆண்டு ரஹானே தலைமையில் விளையாடிய ராஜஸ்தான் அணி தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்துத் துவண்டது.

இவரது தலைமையில் 8 போட்டிகளில் 2 போட்டிகளில் மட்டுமே ராஜஸ்தான் ரோயல்ஸ் வெற்றி பெற்றிருந்தது. அணியில் ஸ்டீவ் ஸ்மித், ஜோப்ரா ஆர்ச்சர் என சிறந்த வீரர்கள் இருந்த போதும் அந்த அணியால் வெற்றிகளைக் குவிக்க முடியவில்லை.

இதனால், ரஹானேவை அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்கி விட்டு, ஸ்டீவ் ஸ்மித்தை அணித்தலைவராக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி அறிவித்தது.

எனினும், அணித்தலைவர் பதவி பறிபோனாலும் அணியில் இடம் பெற்ற ரஹானே, அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி இரண்டாவது ஐ.பி.எல் சதத்தை அடித்தார். அத்தோடு கடந்த 2019ஆம் ஆண்டு சீசனில் 14 போட்டிகளில் விளையாடி 393 ஓட்டங்களைக் குவித்தார்.




எனினும், அணித்தலைவர் பதவியிலிருந்து நீக்கியதால் கடும் அதிருப்தியில் இருந்த ரஹானேவை, தற்போது மயங்க் மார்கண்டே, ராகுல் திவாடியா ஆகிய இரு வீரர்களை கொடுத்து, டெல்லி வாங்கியது. ரஹானே நான்கு கோடி ரூபா ஏலத்தில் எடுக்கப்பட்டவர் ஆவார்.

ரஹானே இதுவரை 140 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி 3,820 ஓட்டங்களை குவித்துள்ளார். இதில் 27 அரைச்சதங்கள், இரண்டு சதங்கள் அடங்கும். இதில், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக 2011ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 100 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி 2,810 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

# பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியை பந்தாடியது சிட்னி சிக்ஸர்ஸ்!

பிக் பேஷ் ரி – 20 தொடரின் 12ஆவது லீக் போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணி 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

பெர்த் மைதானத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணியும் பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 174 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டொம் கர்ரன் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களையும், டேனியல் ஹியுஜஸ் மற்றும் மொய்ஸஸ் ஹென்ரிக்கியுஸ் ஆகியோர் தலா 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியின் பந்துவீச்சில், கிறிஸ் ஜோர்தான் 3 விக்கெட்டுகளையும், ஜெய் ரிச்சட்சன், மெத்தியு கெலி, அஸ்டன் அகர் மற்றும் பவாட் அஹமட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.




இதனைத் தொடர்ந்து 175 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியால், 18.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 126 ஓட்டங்களை பெற முடிந்தது.

இதனால், பரபரப்பான இந்தப் போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணி 48 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அஸ்டன் அகர் 28 ஓட்டங்களையும், மெத்தியு கெலி ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் பந்துவீச்சில், ஜெக்ஸன் பேர்ட் மற்றும் சீன் அபோட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், பென் துவார்ஷுயிஸ் 2 விக்கெட்டுகளையும், டொம் கர்ரன் மற்றும் லோய்ட் போப் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, சிட்னி சிக்ஸர்ஸ் அணி சார்பில் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களையும், 1 விக்கெட்டினையும் சாய்த்த டொம் கர்ரன் தெரிவு செய்யப்பட்டார்.

# கின்னஸ் சாதனைக்கு இலங்கை முயற்சி



கொழும்பு, டிசெ. 28

உலகின் மிகப்பெரிய இரட்டையர் ஒன்றுகூடலை நடத்தி, கின்னஸ் உலக சாதனை படைக்க, இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 2020 ஜனவரி மாதத்தில், இந்தக் கின்னஸ் சாதனையைப் படைக்க எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு ஸ்ரீ லங்கா ட்வின்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.

சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இந்தச் சாதனை நிகழ்வு இடம்பெறவுள்ளதாக இலங்கை இரட்டையர் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அத்துடன் இந்தச் சம்மேளனத்தின் நிறுவனரும் தலைவியுமான உபுலி கமகேயினால் இலங்கை இரட்டையர் சம்மேளனத்தின் அழைப்பிதழ், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் வியாழக் கிழமை கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாவிகளை மன்னிப்பீராக!

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது தமிழ்த்தலைவர்கள் அனைவர்க்கும் ஒன்றை உரைக்க விரும்புகிறேன்.
வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையினராய் இருக்கும் இந்துமக்கள் ஒன்றிணைந்து,
தேர்தலில் இந்துமதத்திற்கு எதிரான செயற்பாடுகளை ஆதரிப்போரை,
நிராகரிக்கவேண்டும் என முடிவு செய்தால்,
உங்களது கதியும் இனப்போராட்டமும் என்னாகும்?
கேள்வியின் கனதியை நம் தலைவர்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன்.

*****

அண்மையில் மற்றொரு செய்தி படித்தேன்.
யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரியான,
சென். ஜோன்ஸ் கல்லூரியில் புதிய அதிபர் ஒருவர் நிர்வாகப் பொறுப்பேற்றாராம்.
இளம் வயதினரான அவ் அதிபர் கல்லூரி நிர்வாகத்தைக் கையேற்றதும்,
அதுநாள் வரை இந்து மாணவர்கள் பிரார்த்தனை செய்துவந்த மண்டபத்தை,
அப்பிரார்த்தனைக்கு வழங்காமல் தடை செய்ததான செய்தி,
முகநூல்களில் பரவலாகப் பகிரப்பட்டது.
நவீன உலகத்தை அறியக் கூடிய இளவயதுள்ள ஒருவரே,
இங்ஙனம் நடக்கிறாரே என நான் மனம் வருந்தினேன்.

*****

நான் யாழ்ப்பாணத்தில் இருந்த பொழுது,
உடுவில் மகளிர் கல்லூரியில் அப்போது அதிபராக இருந்த,
ஓர் பெண்மணியின் செயற்பாட்டை அறிந்து மிகமனம் வருந்தியிருக்கிறேன்.
கல்லூரி தொடங்குகிற நேரத்தில் கல்லூரியின் வாசலில் நின்று,
வருகிற இந்துப் பிள்ளைகளின் நெற்றியில் இருக்கும் விபூதியையும், பொட்டையும்,
மற்றைய சமய அடையாளங்களையும் அழிப்பித்த பின்புதான்,
கல்லூரிக்குள் அவர்களை நுழைய அவர் அனுமதிப்பாராம்.
என்னே அநாகரிகம்!

*****

கிறிஸ்தவக் கல்லூரிகளில் பெருந்தொகையான இந்து மாணவர்களை,
ஏன் சேர்த்துக் கொள்ளவேண்டும்?
பின்னர் ஏன் அவர்களது சமயத்தை இழிவு செய்யவேண்டும்?
வருவாய் நோக்கி இந்துமாணவர்களைச் சேர்த்துக் கொண்டு,
பின் அவர்கள் சார்ந்த மதத்தை இழிவு செய்வது எப்படி நியாயமாகும்?
இன்றும் இந்நாட்டின் பல்வேறு கிறிஸ்தவக் கல்லூரிகளில்,
இத்தகு கொடுமை நடப்பதாய் அறியமுடிகிறது.

*****

சொன்னால் விடயங்கள் இப்படியே நீண்டுகொண்டிருக்கும்.
ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தைக் காட்டு என்ற,
இயேசு பிரானின் வழிவந்தவர்கள் இத்தகு கீழ்மைச்செயல்களில்,
இறங்குவதைக் காண மனம் வருந்துகிறது.
நேற்றைய கிறிஸ்மஸ் செய்தியில் கூட போப் ஆண்டவர்,
எங்களைவிட மோசமானவர்கள் மீது கூட,
கடவுள் தொடர்ந்து அன்பு செலுத்துகிறார் என்று பேசியிருக்கிறார்.
அவர் கூற்று உண்மையாயின் உயர்ந்தவர்களான இந்துக்களின் மீது,
அன்பு செலுத்த கிறிஸ்தவர்களுக்கு என்ன தடை இருக்கிறது?
எல்லா மதத்தலைவர்களும் உலகுக்கு உயர்ந்தவைகளைத்தான் உபதேசிக்கிறார்கள்.
பின்பற்றுவோர்தான் தம் நடவடிக்கைகளால் அவ்வுயர்வுகளைச் சிதைக்க முற்படுகிறார்கள்.
அத்தகையோரால்தான் உயர்ந்தவர்களால் நிறுவப்பட்ட மதக்கொள்கைகள் மாசுபடுகின்றன.
இம்மாறுபட்ட நிலையை சாதாரண மக்கள் உருவாக்கலாம்.
மதத்தலைவர்களே உருவாக்கலாமா?
இதுதான் எனது கேள்வி.
நம்நாட்டிலும் தம்மதத்தின் பெருமையை விளங்காமலே,
கிறிஸ்தவர்களின் செயற்பாடு தொடர்கிறது.
உலகில் ஒரே ஒரு உண்மைக் கிறிஸ்தவன்தான் இருந்தான்,
அவனையும் அநியாயமாய்ச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள் என்று,
பெர்னாட்ஷோ சொன்னது இதனால் தானோ என எண்ணத் தோன்றுகிறது.
எந்த மதத்தையும் இழிவு செய்வது என் நோக்கமன்று.
மத சமரசம் என்ற பெயரில் எனது மதம் இழிவு செய்யப்படுவதையும்,
என்னால் பார்த்திருக்க முடியாது.
அதற்காக மற்றை மதங்களை நான் இழிவு செய்யப் போவதுமில்லை.
அவரவர் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவரவர் செயல்களே அடிப்படையாம்.
இறுதியாக நான் மதிக்கும் இயேசுபிரானின் திருவடிகளில் ஒரு பிரார்த்தனை.
இயேசுபிரானே! உம் உயர்ந்த நோக்கத்தையும்,
உலக உயிர்கள்மேல் நீர் செய்த கருணையையும் விளங்காமல்,
உமது மக்களே உம்மை இழிவு செய்ய முற்படுகிறார்கள்,
அப்பாவிகளை மன்னிப்பீராக! ஆமென் .

*****

முற்றும்

# சிங்களத்தில் தேசிய கீதம்; இன்னும் தீர்மானம் இல்லை

நடைபெறவுள்ள 73ஆவது சுதந்திர நிகழ்வில் சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதத்தை இசைப்பதற்கும், தமிழ் மொழியைப் புறக்கணிப்பதற்கும் அரசு இதுவரை எவ்விதமான உத்தியோகப்பூர்வத் தீர்மானங்களையும் எடுக்கவில்லை என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மேலும் அரசு, அனைத்துச் செயற்பாடுகளிலும் அனைத்து இன மக்களையும் இணைத்தே பயணிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ள சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பது புறக்கணிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படும் செய்தி தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுதந்திர தின நிகழ்வில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படும் செய்தி தவறானது.

இந்த விடயம் தொடர்பாக அரசு இதுவரை எவ்விதமான உத்தியோகபூர்வமான தீர்மானங்களையும் எடுக்கவில்லை. தேசிய நல்லிணக்கத்துக்கு மொழிகளின் முக்கியத்துவம் இன்றியமையாததாகும்.

யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் வாழும் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் முறையான அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில், ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அரசியல் ரீதியில் ஒருமித்த தீர்மானத்தை எடுத்தார்கள் என்றும் குறிப்பிடவும் முடியாது. ஜனநாயக ரீதியிலே தேர்தல் இடம்பெற்றது.

தமக்கான தலைவர் யார் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அனைவருக்கும் காணப்படுகின்றது. அதனையே தமிழ் மக்களும் செய்தார்கள்.

இதேவேளை நாட்டின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டாபய அனைத்து இன மக்களையும் ஒரே விதமாகப் பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் இல்லாத ஒரு விடயத்தை குறிப்பிட்டுக்கொண்டு தமிழ் மக்களின் மத்தியில் வன்மத்தைத் தூண்டும் செயற்பாடுகளே இடம்பெறுகின்றன.

நாட்டில் இரண்டு மொழிகள் வழக்கில் உள்ளன. இரண்டு இனத்தவர்களும் இருமொழியிகளிலும் தேர்ச்சிப்பெற்றிருத்தல் அவசியமாகும் – என்றார்.



# மன்னாரை பாலைவனம் ஆக்கப்போகின்றீர்களா?

## சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக போராட்டம்



மன்னார். டிசெ. 28

மன்னாரில் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராகப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட மக்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'பொறுப்பற்ற பிரதேச செயலகங்கள் எதற்கு?'சட்டத்தை பாதுகாக்க வேண்டிய காவல்துறை வேடிக்கை பார்க்கின்றதா?', 'சட்ட விரோதிகளுக்கு உடந்தையாகவுள்ள புவிச்சரிதவியல் திணைக்களம் எதற்கு?', 'வனத்தை வனாந்தரமாக்கும் வனத்திணைக்களம் எதற்கு?', 'மன்னாரில் பாலைவனமாக்க போகின்றீர்களா?', 'மண் மாபியாக்களை வளர்ப்பதா அரசின் நோக்கம்?' உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார், தோட்டவெயிளில் மணல் அகழ்வில் ஈடுபட்டமைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்குகொண்ட அருட்தந்தை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்கும் இதன்போது கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் மன்னார் மாவட்ட செயலகத்துக்குச் சென்று மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.



இந்தப் போராட்டத்தில் அருட்தந்தையர்கள், மன்னார் பிரதேச சபை உறுப்பினர் மோகன் ராஜ் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நீதியமைச்சர் நிமலுடன் பிரிட்டன் தூதுவர் பேச்சு



கொழும்பு, டிசெ. 28

பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டனுக்கும் நீதித்துறை, மனித உரிமைகள் மற்றும் சட்ட சீர்திருத்த அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் சட்ட சீர்திருத்த அமைச்சில் இந்தச் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை காலை நடந்தது.

இதன்போது சட்டத்துறையில் புதிய அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் மற்றும் சிறைத்துறையில் முன்னெடுக்கப்படும் சீர்திருத்தங்கள் குறித்து அமைச்சர், தூதுவருக்குத் தெளிவுப்படுத்தினார்.

சிறைச் சீர்திருத்தம் மற்றும் புதிய சட்டத்தை உருவாக்கும் விடயங்களில் ஆலோசனைகளை வழங்கப் பிரிட்டன் அரசு தயாராக இருப்பதாகத் தூதுவர் கூறினார்.

புதிய அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளுக்கும் தூதுவர் தனது பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார். (ஐ)

## வெள்ளை வான் சாரதிகளுக்கு விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 28

தமிழர்களை வெள்ளை வானில் கடத்தி முதலைக்கு இரையாக்கியதாகச் செய்தியாளர் சந்திப்பில் தகவல் வெளியிட்ட இருவரையும் எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுக் கொழும்பு தலைமை நீதவான் லங்கா ஜெயரத்ன முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)


கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550

கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்



★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேலன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28 .12.2019 இல் வெளியிடப்பெற்றது.